# சுவிசேஷங்கள்

**பாடம் 1**

## சுவிசேஷங்கள் ஓர் அறிமுகம்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 6
இலக்கிய தன்மை ........ 7
**இலக்கிய நடை** ........ 7
வரலாற்றுக் கதை ........ 8
கிரேக்க-ரோம வாழ்க்கை வரலாறு ........ 10
வேதாகம வரலாற்றுக் கதை ........ 14
**நம்பகத்தன்மை** ........ 15
அணுகல் ........ 16
உண்மைத்தன்மை ........ 17
உறுதிப்படுத்துதல் ........ 19
பயிற்சி ........ 20
இறையியல் நம்பிக்கைகள் ........ 21
பரிசுத்த ஆவியானவர் ........ 22
சபையில் அவற்றின் நிலை ........ 24
**தொகுத்தல்** ........ 25
ஒற்றுமைகள் ........ 25
தொகுப்பைக் குறித்த கோட்பாடுகள் ........ 29
உறுதி ........ 30
**நம்பகத்தன்மை** ........ 31
நம்பகமான எழுத்தாளர்கள் ........ 32
அப்போஸ்தலர்களின் ஒப்புதல் ........ 33
சபையின் சாட்சி ........ 33
ஒற்றுமை ........ 35
**அதே கதை** ........ 36
**இயேசு** ........ 37
சான்றுகள் ........ 38
சொல்லகராதி ........ 39
நிலைகள் ........ 42
வகை ........ 44
**வெளிப்படையான சிரமங்கள்** ........ 45
காலவரிசை ........ 45
புறக்கணிப்பு ........ 46
வெவ்வேறு நிகழ்வுகள் ........ 47
வெவ்வேறு பேச்சுகள் ........ 47




வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

**தனித்துவமான வலியுறுத்தல்கள்** ........ 48
மத்தேயு சுவிசேஷத்தில் இயேசு யார்? ........ 51
மாற்கு சுவிசேஷத்தில் இயேசு யார்? ........ 53
லூக்கா சுவிசேஷத்தில் இயேசு யார்? ........ 56
யோவான் சுவிசேஷத்தில் இயேசு யார்? ........ 61
**முடிவுரை** ........ **63**



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

நம் வாழ்வில் செய்திகள் எவ்வளவு முக்கியமானவை என்பதை நீங்கள் எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி நாம் பெறும் முக்கியமான தகவல்கள் நமது கருத்துக்கள், மதிப்புகள், திட்டங்கள் மற்றும் நம் வாழ்வின் பல அம்சங்களை பாதிக்கின்றன. சில நேரங்களில் செய்தி நிகழ்வுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை, அவை நமது முழு உலகக் கண்ணோட்டத்தையும் மாற்றும். சரி, நாம் அதைப் பற்றி யோசிக்கும்போது, வேதாகமமே ஒரு செய்திக் காப்பகம் போல இருக்கிறது. வரலாற்றில் தேவனுடைய மக்கள் தொடர்பான அனைத்து வகையான நல்ல மற்றும் கெட்ட செய்திகளையும் இது பதிவு செய்கிறது. மேலும் இந்தக் கதைகளைப் படிக்கும்போது, அவை நம்மைப் பல வழிகளில் பாதிக்கவும் நம்மில் மாற்றத்தைக் கொண்டு வரவும் செய்கின்றன. ஆனால் சந்தேகத்திற்கு இடமின்றி, வேதவசனங்கள் நமக்குச் சொல்ல வேண்டிய மிகச் சிறந்த செய்தி என்னவென்றால் அது, ”நற்செய்தி” அல்லது ”சுவிசேஷங்கள்” என்று நாம் குறிப்பிடும் அறிக்கைகளின் தொகுப்பாகும். அவை நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் அவரின் செயலைப் பற்றியதுமான தகவல்கள் ஆகும். அவை நம் வாழ்க்கையை மாற்றுபவையாகும்.

இதுவே சுவிசேஷங்கள் என்கிற நமது தொடரின் முதல் பாடமாகும். இந்தத் தொடரில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் ஊழியத்தைப் பற்றி மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் எழுதிய புத்தகங்களை ஆராய்வோம். “சுவிசேஷங்கள் ஒரு அறிமுகம்” என்ற தலைப்பில் உள்ள இந்தப் பாடத்தில், இந்தப் புத்தகங்களை பற்றிய ஒரு நோக்குநிலையைப் பெறுவோம். இதனால் இந்தப் புத்தகங்களை இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ளவும், இன்றைய வாழ்க்கையில் அவற்றை முழுமையாகப் பயன்படுத்தவும் அது உதவும்.

சுவிசேஷங்களின் அறிமுகத்தில், நான்கு முக்கியமான விஷயங்களைத் தொடுவோம். முதலில், சுவிசேஷங்களை அவற்றின் இலக்கியத் தன்மையின் அடிப்படையில் ஆராய்வோம். இரண்டாவதாக, சபையில் அவைகளின் நிலையைப் பார்ப்போம். மூன்றாவதாக, சுவிசேஷங்களுக்கு இடையிலான ஒற்றுமையை நாம் கருத்தில் கொள்வோம். நான்காவதாக, அவற்றை ஒன்றுக்கொன்று வேறுபடுத்தும் வகையை ஆராய்வோம். இந்தப் புத்தகங்களின் இலக்கியத் தன்மையைப் பார்த்து ஆரம்பிக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# இலக்கிய தன்மை

> பொதுவாக, நாம் இலக்கியங்களைப் படிக்கும்போது, நாம் எந்த வகையான இலக்கியத்தைப் படிக்கிறோம் என்பது பற்றிய சில யோசனைகள் நமக்கு இருக்கும், அதுதான் அதை எப்படிப் படிக்க வேண்டும், எதை எதிர்பார்க்கிறோம் என்று நமக்கு வழிகாட்டுகிறது. உதாரணமாக, நீங்கள் ஒரு வரலாற்று நாவலைப் படித்தால், அது உண்மை வரலாறாக இருக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள், அப்படிச் செய்யும்போது நீங்கள் தவறாக வழிநடத்தப்பட வாய்ப்பில்லை. அல்லது நீங்கள் ஒரு சிறுகதைத் தொகுதியைப் படித்தால், அது தொடர்ச்சியான நாவல் அல்ல என்பது உங்களுக்குத் தெரியும், நீங்கள் அதை அப்படிப் படிக்க மாட்டீர்கள். எனவே, நாம் எந்த வகையான இலக்கியத்தைப் படிக்கிறோம், அந்த இலக்கியத்தில் எந்த மாதிரியான மரபுகள் இயங்குகின்றன என்பதைப் பற்றிய சில யோசனைகள் நமக்கு இருக்க வேண்டும்.
>
> Dr. ரிச்சார்ட் பாக்கம்

சுவிசேஷங்களின் இலக்கியத் தன்மையை இரண்டு கோணங்களில் ஆராய்வோம். முதலாவதாக, சுவிசேஷங்களின் இலக்கிய நடையைப் பார்ப்போம் – அதாவது அவற்றின் மேலோட்டமான இலக்கிய பண்புகள் என்ன என்பதைப் பார்ப்போம் – இரண்டாவதாக, அவற்றின் வரலாற்று நம்பகத்தன்மையைப் பற்றி விவாதிப்போம். முதலில் நான்கு சுவிசேஷங்களின் இலக்கிய நடையைப் பற்றிப் பார்ப்போம்.

## இலக்கிய நடை

பொதுவாக, இலக்கிய நடை என்பது இலக்கிய வகையைக் குறிக்கிறது. இலக்கிய நடைகள் பொதுவாக அவற்றின் இலக்கிய வடிவம் மற்றும் செயல்பாட்டின் அடிப்படையில் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன, அதாவது அவற்றின் கதை பாணி மற்றும் உருவக மொழியின் பயன்பாடு போன்றவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றன.

வேதாகமம் பல்வேறு இலக்கிய நடைகளைக் கொண்டுள்ளது. உதாரணமாக, பழைய ஏற்பாட்டில் தாவீது பற்றிய கதைகள் போன்ற வரலாற்றுக் கதைகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உள்ளன. மற்றொரு வகை கவிதை, சங்கீதம் போன்றவை. கடிதங்கள் அல்லது நிருபங்கள் மற்றொரு வகையாகும், மேலும் தீர்க்கதரிசனம் மற்றும் பல. இலக்கியத்தின் ஒவ்வொரு நடைக்கும் அதன் சொந்த மரபுகள், அதன் சொந்த தொடர்பு வழிகள் உள்ளன. அதனால்தான் சுவிசேஷங்களின் நடையைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது. அவைகள் எப்படி போதிக்கின்றன என்பதை முதலில் புரிந்து கொண்டால், அவைகள் என்ன போதிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்வது எளிது.

சுவிசேஷங்கள் எவ்வாறு உரையாடுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள, அவற்றின் நடையை மூன்று படிகளில் அடையாளம் கண்டு விவரிப்போம். முதலில், சுவிசேஷங்களை வரலாற்றுக் கதையாக அடையாளப்படுத்தும் சில பொதுவான அறிக்கைகளை நாம் உருவாக்குவோம். இரண்டாவதாக, அவற்றை கிரேக்க-ரோமன் வாழ்க்கை வரலாறு போன்ற ஒரு குறிப்பிட்ட வகை வரலாற்றுக் கதையுடன் ஒப்பிடுவோம். மூன்றாவதாக, பழைய ஏற்பாட்டில் உள்ள வரலாறுகள் போன்ற வேதாகம வரலாற்றுக் கதைகளுடன் சுவிசேஷங்களை ஒப்பிடுவோம். வரலாற்றுக் கதையின் பொது வகையுடன் ஆரம்பிக்கலாம்.

## வரலாற்றுக் கதை

வரலாற்றுக் கதைகள் என்பது கடந்த காலத்தில் வாழ்ந்த மக்களைப் பற்றிய கதைகள் மற்றும் அவர்களின் நாட்களில் நடந்த செயல்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய கதைகள் ஆகும். அடிப்படையில், சுவிசேஷங்கள் வரலாற்றுக் கதைகளாக இருக்கின்றன, ஏனெனில் அவை இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையையும் ஊழியத்தையும் பதிவு செய்கின்றன.

> வேதாகமம் மற்றும் சுவிசேஷங்களின் பெரும்பகுதி வேண்டுமென்றே கதை வடிவில் எழுதப்பட்டுள்ளன, ஏனெனில் நாம் கதையின் மக்களாக இருக்கிறோம். நாம் ஒரு சிறந்த கதையில் ஈடுபடும்போது, மனதளவில் மட்டுமல்ல, நம் உணர்ச்சிகளிலும், உடல் உணர்வுகளிலும் கூட, நாம் இயல்பாகவே ஈடுபடுகிறோம். மேலும் கதைகள் மற்றவர்களின் அனுபவங்களின் நிழலில் வாழ நமக்கு உதவுகின்றன. இது கதையின் வல்லமையின் பெரும்பகுதியாகும். எனவே இலக்கிய வடிவில், கதை வடிவில் நம்மிடம் உள்ள சுவிசேஷங்கள், இயேசுவைப் பற்றிய சத்தியங்களைக் கற்றுக்கொள்ள நமக்கு உதவுவதோடு மட்டுமல்லாமல், அவரை நேரடியாக அனுபவிக்கவும், தேவனின் ராஜ்யமும் பரலோக ராஜ்யமும் உண்மையில் வருவதைக் காணவும் உதவுகின்றன. இயேசுவின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இரக்கத்தை அவர் தாழ்மையானவர்களை நேசிக்கிறார் என்கிற ஒரு அறிக்கையாக மட்டும் நமக்கு காட்டாமல், தாழ்மையுள்ளவர்களை உயர்த்தி, பெருமையுள்ளவர்களை தாழ்த்துகிறார் என்பதை அவர் கதைகளாக சொல்வதையும் அதன் படி அவர் நடப்பதை நாம் பார்க்கவும் இவை உதவுகின்றன. மேலும் சுவிசேஷங்களாகிய கதைகள் மற்றும் இலக்கிய வடிவங்கள் இயேசுவின் சீஷர்கள் அவரைப் பின்பற்றியது போலவே நாமும் அவரைப் பின்பற்ற உதவுகின்றன. கதைகளை அதன் இலக்கிய வடிவில் கொடுப்பதன் மூலம் நாம் இயேசுவைப் பின்பற்றவும் அது உதவுகிறது. அந்தக் கதாபாத்திரங்களின் தோல்விகளிலும், வெற்றிகளிலும் நம்மை அடையாளப்படுத்திக் கொண்டு, நம் சொந்தக் கதையில், அதாவது நம் வாழ்வில் உண்மையாக வாழ அவை நமக்கு உதவுகின்றன.
>
> Dr. ஜோனதான் டி. பென்னிங்டன்

பண்டைய உலகின் மதச்சார்பற்ற நூல்களில், வரலாற்றுக் கதைகள் பொதுவாக மூன்று முக்கிய பகுதிகளாக வளர்ந்தன. கதையின் ஆரம்பம் கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்துகிறது மற்றும் கதாபாத்திரங்கள் அடைவதற்கான ஒரு இலக்கையும் அது நிறுவுகிறது. மையப்பகுதியானது பெரும்பாலும் கதாபாத்திரங்களின் இலக்குகளை நிறைவேற்றுவதில் அவர்களின் வெற்றியின் வழியில் உள்ள சவால்கள் அல்லது தடைகளை முன்வைக்கிறது. நிகழ்வுகளின் முடிவுரை தான் அதன் முடிவாகும். கதாபாத்திரங்கள் தங்கள் இலக்குகளை எப்படி நிறைவேற்றின அல்லது நிறைவேற்றவில்லை என்பதை இது பொதுவாகக் காட்டுகிறது.

சுவிசேஷங்களும் இதே அடிப்படைக் குறிப்பைப் பின்பற்றுகின்றன. ஒவ்வொன்றும் கதையின் முக்கிய கதாபாத்திரமாக இயேசுவை அறிமுகப்படுத்தி, தேவனுடைய ராஜ்யத்தின் மூலம் இரட்சிப்பைக் கொண்டுவரும் அவரது இலக்கை விவரிக்கின்றன. ஒவ்வொன்றும் இயேசுவின் அதிகாரத்திற்கும் சேவைக்கும் இருக்கக்கூடிய சவால்களை முன்வைப்பதன் மூலம் தொடர்கின்றன. ஒவ்வொன்றும் இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் முடிவை விவரிப்பதன் மூலம் முடிவடைகிறது. இந்த ஒற்றுமைகளின் காரணமாக, சுவிசேஷங்களின் மேலோட்டமான நடையை வரலாற்றுக் கதை என்று கிட்டத்தட்ட அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## கிரேக்க-ரோம வாழ்க்கை வரலாறு

வரலாற்றுக் கதைகளின் பெரிய வகைக்குள், சில வியாக்கியான அறிஞர்கள் சுவிசேஷங்களை கிரேக்க-ரோம வாழ்க்கை வரலாறு என அறியப்படும் கதைகளின் ஒரு சிறிய குழுவிற்கு சொந்தமானவைகள் என்று பரிந்துரைத்துள்ளனர்.

சுவிசேஷங்களுக்கும் கிரேக்க-ரோம வாழ்க்கை வரலாற்றிற்கும் இடையிலான இந்த ஒப்பீடுகளை இரண்டு படிகளில் கருத்தில் கொள்வோம். முதலில், அவற்றுக்கிடையேயான ஒற்றுமையைப் பார்ப்போம். இரண்டாவதாக, அவற்றின் சில வேறுபாடுகளைப் பார்ப்போம். அவைகளின் ஒற்றுமைகளுடன் ஆரம்பிக்கலாம்.

**ஒற்றுமைகள்.** பண்டைய வாழ்க்கை வரலாறுகள் சிறந்த தலைவர்களின் வாழ்க்கையை விவரிக்கின்றன. அவை பல்வேறு கதாபாத்திரங்கள் மற்றும் கதைகளை உள்ளடக்கியிருந்தாலும், கிரேக்க-ரோம வாழ்க்கை வரலாறுகள் விசேஷித்த தலைவரை முன்னிலைப்படுத்தும் வழிகளில் இந்த கதாபாத்திரங்கள் மற்றும் கதைகளை விவரித்தன. அவைகள் தலைவரின் கருத்துக்களைப் பாதுகாத்தன, மேலும் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு அவரது செயல்களைப் பற்றிய விழிப்புணர்வை நிலைநாட்டின. சுவிசேஷங்கள் இந்த வழிகளில் பண்டைய சுயசரிதைகளைப் போலவே இருந்தன.

மத்தேயும் லூக்காவும் இயேசுவின் பிறப்பைப் பற்றியும், நான்கு சுவிசேஷங்கள் இயேசுவின் மரணத்தைப் பற்றியும் விவரிப்பதில் சில பண்டைய சுயசரிதைகளுக்கு இணையாக இவை இருப்பதையும் காண்கிறோம். சுவிசேஷங்கள் இயேசுவின் வாழ்க்கை நிகழ்வுகளைக் கண்டுபிடிக்கும் வேளையில், அவைகள் பண்டைய வாழ்க்கை வரலாற்றின் மரபுகளைப் பின்பற்றுகின்றன. மற்ற பண்டைய வாழ்க்கை வரலாற்றாசிரியர்களைப் போலவே, சுவிசேஷ எழுத்தாளர்களும் இயேசுவின் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட நிகழ்வுகளை பல்வேறு வழிகளில் எழுதினர். சில நேரங்களில் அவர்கள் காலவரிசைப்படி விஷயங்களை ஒழுங்குபடுத்தினர். சில நேரங்களில் அவர்கள் தலைப்புக்கு ஏற்ப விஷயங்களைத் தொகுத்தனர். சில சமயங்களில் அவர்கள் புவியியலைச் சுற்றி கூட ஒழுங்கு செய்தனர்.

> சுவிசேஷங்கள் பொதுவாக காலவரிசைப்படி இருப்பதை முதலில் உணர்ந்துகொள்வது முக்கியம் என்று நினைக்கிறேன். உதாரணமாக, அவை யோவான் ஸ்நானகனின் ஞானஸ்நானத்துடன் தொடங்குகின்றன, பின்னர் நீங்கள் இயேசு ஞானஸ்நானம் பெறுவதைப் பார்க்கிறீர்கள், பின்னர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நீங்கள் இயேசுவின் ஊழியத்தை பார்க்கிறீர்கள், அதைத் தொடர்ந்து அவர் கைதுசெய்யப்படுவதையும், அவரது விசாரணையையும், சிலுவையில் அறையப்படுதலையும் அவரின் உயிர்த்தெழுதலையும் பார்க்கிறீர்கள். எனவே, ஒட்டுமொத்த அர்த்தத்தில், காலவரிசை ஒழுங்கு உள்ளது. அதே சமயம், இரண்டு சுவிசேஷங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், சில சமயங்களில் நிகழ்வுகள் அல்லது வார்த்தைகள் வேறு வரிசையில் கொடுக்கப்படலாம். ஒவ்வொரு விஷயமும் துல்லியமாகவும் காலவரிசையாகவும் கொடுக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் நாம் சுவிசேஷங்களைப் படித்தால் மட்டுமே அது ஒரு சிக்கலை ஏற்படுத்தும் என்று நான் நினைக்கிறேன். ஆனால் பெரும்பாலான எழுத்தாளர்கள் மற்றும் பெரும்பாலான வகையான விவரிப்புகள், ஒரு எழுத்தாளர் தனது பொருளை காலவரிசைப்படி அல்லாமல் ஒழுங்கமைக்க அனுமதிக்கின்றன. எடுத்துக்காட்டாக, பெரும்பாலும் நாம் தர்க்கரீதியான வரிசையைக் காண்போம் அல்லது பாடங்களின் தலைப்புகளுடைய குழுவைக் காண்போம். ஆரம்பகால கிறிஸ்தவர்கள், எடுத்துக்காட்டாக, நான்காம் நூற்றாண்டின் ஆரம்பகால கிறிஸ்தவ வரலாற்றாசிரியரும் பேராயருமான எசூபியஸ், சுவிசேஷங்களின் வரிசையில் உள்ள வேறுபாடுகள் ஏற்கனவே பரவலாக அறியப்பட்ட ஒன்றுதான் என்று குறிப்பிடுகிறார், மேலும் ஆரம்பகால வாசகர்கள் இதில் ஒரு பிரச்சனையும் இல்லை என்பதை அறிந்திருந்தனர், ஏனெனில் காலவரிசை கண்டிப்பாக வேண்டும் என்று அவர்கள் பெரிதாக கருதவில்லை.
>
> – Dr. டேவிட் ஏ. ரெடலிங்ஸ்

கிரேக்க-ரோம சுயசரிதைகளின் மற்றொரு முக்கிய பண்பு என்னவென்றால், அவை கடந்த கால நிகழ்வுகளை வரலாற்று உண்மைகளாக தொடர்புபடுத்துகின்றன, இதனால் கடந்த காலம் நிகழ்காலத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது. வாழ்க்கை வரலாறுகள் குறிப்பிட்ட, வரலாற்று நபர்களின் தனிப்பட்ட, திரும்ப வாழ முடியாத வாழ்க்கை மற்றும் பங்களிப்புகளைப் பதிவு செய்வதில் கவனம் செலுத்துகின்றன.

பொதுவாக, பண்டைய வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் துல்லியமான வாய்வழி மற்றும் எழுதப்பட்ட பதிவுகளை ஆராய்ச்சி செய்து பாதுகாக்க



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முயன்றனர். கி.பி.46 முதல் 120 வரை வாழ்ந்த மதிப்பிற்குரிய வாழ்க்கை வரலாற்றாசிரியர் புளூட்டார்க் வழங்கிய உதாரணத்தைக் கவனியுங்கள். புளூடார்க் ஒரு மதச்சார்பற்ற கிரேக்க வரலாற்றாசிரியர் ஆவார், அவர் சுவிசேஷங்கள் எழுதப்பட்ட அதே நேரத்தில் கி.பி.70 இல் எழுதினார். சிசரோவின் பெற்றோரைப் பின்னணியாகக் கொண்டு லைஃப் ஆப் சிசரோ என்பதை எழுதத் தொடங்கினார், ஆனால் சிசரோவின் தந்தையைப் பற்றிய தரவுகளின் வரம்புகளை அறிந்து கொண்டார்.

> சிசரோவின் தாயான ஹெல்வியா நன்றாகப் பிறந்து நியாயமான வாழ்க்கை வாழ்ந்தார் என்று பொதுவாகக் கூறப்படுகிறது; ஆனால் அவரது தந்தை பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. சிலர் அவரை ஒரு ஆடை சுத்தம் செய்பவரின் மகனாகவும், அந்தத் தொழிலில் கற்றுத் தேறினவராகவும் இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள், மற்றவர்கள் ரோமர்களுக்கு எதிராக மரியாதை இல்லாமல் போரை நடத்திய வோல்சியன்களின் புகழ்பெற்ற மன்னரான டல்லஸ் அட்டியஸின் வம்சமாக இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள்.

சிசரோவின் பெற்றோர்கள் பற்றிய ஊகங்களிலிருந்து உண்மையைப் பிரிப்பதில் புளூடார்க்கின் எச்சரிக்கையானது, குறைந்தபட்சம் சில பழங்கால வாழ்க்கை வரலாற்றாசிரியர்களாவது வரலாற்று விவரங்களின் மீது கவனம் செலுத்தியதும், அவர்களுக்கு துல்லியமான விவரங்களில் ஆர்வம் இருந்ததும் தெளிவாகிறது. சுவிசேஷங்கள் புளூடார்க்கைப் போலவே தங்கள் அறிக்கையிடலில் கவனமாக இருந்ததற்கான சான்றுகளை வழங்குகின்றன.

பரவலாகப் பேசினால், கிரேக்க-ரோம உலகில் வாழ்க்கை வரலாற்று இலக்கியம் பிரபலமாக இருந்த காலத்தில் எழுதப்பட்ட வரலாற்றுக் கதைகள் என்று சுவிசேஷங்களை சொல்வது நியாயமானது. வாழ்க்கை வரலாறுகளுக்கான இந்த பரவலான வெளிப்படைத்தன்மை, சுவிசேஷ எழுத்தாளர்களை அவர்களின் பணியில் ஊக்குவித்தது, மேலும் அந்த வாழ்க்கை வரலாறுகளின் சில முறையான மரபுகளைப் பின்பற்ற அவர்களைத் தூண்டியது.

ஆனால் சுவிசேஷங்களுக்கும் கிரேக்க-ரோம வாழ்க்கை வரலாறுகளுக்கும் இடையே ஒற்றுமைகள் இருந்தபோதிலும், குறிப்பிடத்தக்க வேறுபாடுகளும் உள்ளன.

**வேறுபாடுகள்.** நாம் குறிப்பிடக்கூடிய பல வேறுபாடுகள் இருந்தாலும், மூன்றில் மட்டுமே கவனம் செலுத்துவோம். முதலாவதாக, சுவிசேஷங்கள் கிரேக்க-

ரோம வாழ்க்கை வரலாறுகளிலிருந்து அவை யாருக்காக எழுதப்பட்டது வேறுபடுகின்றன.

பண்டைய வாழ்க்கை வரலாறுகள் பொதுவாக பரந்த வாசகர்களுக்காக எழுதப்பட்டன, அதே சமயம் சுவிசேஷங்கள் ஆரம்பகால கிறிஸ்தவ சபையின் ஒப்பீட்டளவில் குறிப்பிட்ட வாசகர்களுக்காக மட்டுமே எழுதப்பட்டன. அவை வாழ்க்கை வரலாறுகளின் சில பண்புகளை வெளிப்படுத்தினாலும், அவை அடிப்படையில் சபைக்குள் மத பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. சபையின் போதனை மற்றும் ஆராதனையில் அவை எவ்வளவு விரைவாகப் பயன்படுத்தப்பட்டன என்பதன் மூலம் இந்த குறிப்பிட்ட வடிவமைப்பு உறுதிப்படுத்தப்படுகிறது.

இரண்டாவதாக, சுவிசேஷங்கள் அவற்றின் முக்கியத்துவங்களில் வரலாறுகளிலிருந்து வேறுபடுகின்றன. கிரேக்க-ரோம வாழ்க்கை வரலாறுகள் பொதுவாக அவைகளின் முக்கிய கதாபாத்திரங்களின் தனிப்பட்ட குணங்களை வலியுறுத்துகின்றன, மேலும் அவர்களின் வாழ்க்கையையும் ஆளுமைகளையும் பின்பற்ற மற்றவர்களை ஊக்குவிக்கின்றன. இயேசுவின் வாழ்க்கை நமக்கு முன்மாதிரியாக பல வழிகளில் இருந்தாலும், சுவிசேஷங்கள் வேறுபட்ட கவனம் செலுத்துகின்றன. அவை இயேசுவின் தனித்துவத்தை வலியுறுத்துகின்றன. தேவனை வெளிப்படுத்துபவராகவும் வேறு எவராலும் செய்ய முடியாதபடி அவருடைய மக்களை மீட்பவராகவும் அவர்கள் அவரை மையமாகக் கொள்கிறார்கள். இதனாலேயே சுவிசேஷங்களின் கதைகளில் பெரும்பாலான பகுதி அவரது வாழ்க்கையின் கடைசி வாரத்தில் – அதாவது அவர் பாடுகள் அனுபவித்த வாரத்தில் செலவிடப்படுகின்றன.

மூன்றாவதாக, சுவிசேஷங்களும் பண்டைய வாழ்க்கை வரலாறுகளும் வெவ்வேறு கலாச்சாரங்களைக் குறிக்கின்றன. வாழ்க்கை வரலாறுகள் கிரேக்க-ரோம ஆர்வங்கள், மதிப்புகள் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றை வெளிப்படுத்தின. சுவிசேஷங்கள் யூத கலாச்சாரம் மற்றும் குறிப்பாக பழைய ஏற்பாட்டால் அதிகம் தாக்கத்திற்கு உள்ளாகின்றன. கிரேக்க கலாச்சாரம் மற்றும் சிந்தனையால் அதிகம் தாக்கப்பட்ட சுவிசேஷமான லூக்காவின் சுவிசேஷத்திலும் இதுவே உண்மையாகும்.

முடிவில், சுவிசேஷங்களுக்கும் கிரேக்க-ரோம வாழ்க்கை வரலாறுகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க ஒற்றுமைகள் உள்ளன. மேலும் இந்த ஒற்றுமைகள் சுவிசேஷங்களின் அர்த்தத்தை புரிந்து கொள்ள உதவலாம். ஆனால் அவற்றுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருக்கிற காரணத்தால், கிரேக்க-ரோம வாழ்க்கை வரலாற்றின் இலக்கிய நடைக்கு சுவிசேஷங்கள் சரியாக பொருந்தவில்லை என்பது தெளிவாகிறது.

பொது வரலாற்று விவரிப்பு மற்றும் கிரேக்க-ரோம வாழ்க்கை வரலாறு ஆகியவற்றின் அடிப்படையில் சுவிசேஷங்களில் உள்ள விவரங்களை இப்போது நாம் கருத்தில் கொண்டுள்ளோம், அவற்றை வேதாகம வரலாற்று விவரிப்பின் நடையுடன் ஒப்பிட நாம் தயாராக இருக்கிறோம்.

## வேதாகம வரலாற்றுக் கதை

சுவிசேஷங்கள் வழக்கமான வரலாற்றுக் கதைகள் மற்றும் கிரேக்க-ரோம வாழ்க்கை வரலாறுகளுக்கு ஒத்திருப்பது போலவே, அவை பழைய ஏற்பாட்டில் உள்ள வரலாற்றுக் கதைகளுடன் மிகவும் ஒத்திருக்கின்றன. இது நமக்கு ஆச்சரியமாக இருக்கக்கூடாது. எல்லாவற்றிற்கும் மேலாக, பழைய ஏற்பாட்டு விவரிப்புகள் சுவிசேஷ எழுத்தாளர்களின் பரிசுத்த வேத எழுத்துக்களின் ஒரு பகுதியாகும். ஒவ்வொரு சுவிசேஷ எழுத்தாளரும் பழைய ஏற்பாட்டிலிருந்து உபயோகித்த குறிப்புகளிலிருந்து,அநேகமாக இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்களை விட அவர்கள் பழைய ஏற்பாட்டை நன்கு அறிந்திருந்தார்கள் என்று உறுதியாக நம்பலாம். மேலும் பழைய ஏற்பாட்டுடன் அவர்களுக்கு இருந்த பரிச்சயம் அவர்கள் தங்கள் பணியை எப்படி அணுகினார்கள் என்பதில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

மேலும், சுவிசேஷ எழுத்தாளர்களும் பழைய ஏற்பாட்டு வரலாற்றுக் கதைகளின் ஆசிரியர்களும் ஒரே நோக்கத்திற்காகவே எழுதினார்கள், அதாவது, தேவன் மக்களுடன் செய்த உடன்படிக்கையை விளக்கி அதை நியாயப்படுத்துவதற்காக எழுதினார்கள். உதாரணமாக, யாத்திராகமம் 1-19 போன்ற வரலாற்றுக் கதைகள் யாத்திராகமம் 20-24 இல் உள்ள மோசேயின் உடன்படிக்கைக்கான வரலாற்று அடிப்படையை வழங்குகின்றன.

இந்த நோக்கம் யாத்திராகமம் 24:8 போன்ற பகுதிகளில் தெளிவாக உள்ளது, இந்த விவரிப்புக் விவரத்தை நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து "கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே" என்றான் (யாத்திராகமம் 24:8).

யோசுவா 1-23 போன்ற பிற வேதாகம விவரிப்புகள், யோசுவா 24 இல் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கான அடிப்படையை வழங்குகின்றன. நியாயாதிபதிகள் மற்றும் 1 சாமுவேல் புத்தகங்களின் விவரிப்புகள் 2 சாமுவேல் 7 இல் உள்ள தாவீதின் உடன்படிக்கையின் வரலாற்று அடிப்படையாகும். அதே



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

போல, இயேசு நிறுவிய புதிய உடன்படிக்கைக்கான வரலாற்று அடித்தளத்தை சுவிசேஷங்கள் வழங்குகின்றன.

லூக்கா 22:20 இல் உள்ள லூக்காவின் விவரிப்பு யாத்திராகமம் 24:8 இல் நாம் இப்போது வாசித்த விவரங்களை எதிரொலிக்கும் விதத்தைக் கவனியுங்கள்:

> போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: "இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" என்றார் (லூக்கா 22:20).

சுருக்கமாக, சுவிசேஷங்களை மற்ற அறியப்பட்ட இலக்கிய நடைகளுடன் ஒப்பிடும்போது, அவை வேதாகம வரலாற்றுக் கதைகளுடன் மிகவும் ஒத்ததாக இருக்கின்றன. ஆனால் அவை எல்லா விதத்திலும் மற்ற வேதாகம வரலாற்றுக் கதைகளைப் போலவே துல்லியமாக உள்ளன என்பது இதன் அர்த்தம் அல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக, அவைகள் கிரேக்க-ரோம வாழ்க்கை வரலாற்றிலிருந்து சில அம்சங்களை கடன் வாங்குகின்றன. இந்த அர்த்தத்தில், சுவிசேஷங்களை ஒரு புதிய வகை வேத வரலாற்று விவரிப்பு என்று நாம் கூறலாம். எனவே, நாம் அவற்றைப் படிக்கும்போது, சுவிசேஷங்களை முதன்மையாக வேத வரலாற்றுக் கதைகளாகக் கருத இது உதவும். ஆனால் அவைகள் இயேசுவின் வாழ்க்கை வரலாற்றுக்குத் தரும் முக்கியத்துவத்தையும் நாம் பார்க்க வேண்டும், மேலும் அவருடன் தொடர்புடைய மற்ற கதாபாத்திரங்களையும் அவை விளக்குகின்றன.

சுவிசேஷங்களின் இலக்கிய நடையை ஆராய்ந்த பின்னர், இயேசுவைப் பற்றிய வரலாற்று விவரங்களைப் பார்த்து, சுவிசேஷங்களின் நம்பகத்தன்மையைப் பற்றிய கேள்விக்கு நாம் திரும்பத் தயாராக இருக்கிறோம்.

## நம்பகத்தன்மை

வரலாறு முழுவதும், நம்பகமான வரலாற்றாசிரியர்களுக்கும் நம்பகமற்ற வரலாற்றாசிரியர்களுக்கும் இடையேயும், நம்பகமான ஆதாரங்கள் மற்றும் நம்பகமற்ற ஆதாரங்களுக்கு இடையேயும் ஒரு வேறுபாடு தொடர்ந்து கண்டறியப்பட்டுள்ளது. நமக்கு எழும் கேள்வி இதுதான்: நான்கு சுவிசேஷங்களை எழுதியவர்கள் இயேசுவின் வாழ்க்கையைப் பற்றிய நம்பகமான பதிவுகளை எழுதியிருக்கிறார்களா அல்லது இல்லையா? நம் நாளின் அளவுகோல்கள் அவர்கள் பின்பற்றிய அளவுகோல்களுக்கு ஒத்ததாக இல்லை என்றாலும், மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோர் இயேசுவைப் பற்றி நம்பகமான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விவரங்களை எழுதுவதற்கான ஆதாரங்களையும் உந்துதலையும் கொண்டிருந்தனர் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

இயேசுவினுடைய வாழ்க்கையின் நம்பகமான வரலாற்றுப் பதிவுகள் சுவிசேஷங்கள் என்பதை நிரூபிக்க எண்ணற்ற வழிகள் இருந்தாலும், ஆறு ஆதாரங்களில் மட்டுமே கவனம் செலுத்துவோம்.

## அணுகல்

முதலாவதாக, சுவிசேஷ எழுத்தாளர்கள் தாங்கள் பதிவு செய்த நிகழ்வுகளை அறிந்து கொள்ள ஒரு வழி இருந்தது. இன்று போலவே, பண்டைய உலகம் நம்பகமான வரலாற்றாசிரியர்கள் தங்கள் விஷயம் தொடர்பான பல உண்மைகளை அணுக வேண்டும் என்று எதிர்பார்த்தது.

ரோமானிய வரலாற்றாசிரியர் புளூட்டார்க்கை மீண்டும் ஒருமுறை கவனியுங்கள். டெமோஸ்தீனஸின் வாழ்க்கையைப் பற்றி எழுதும்போது அவரது தொடக்கக் கருத்துகளில், ஒரு வரலாற்றாசிரியர் தனது வேலையை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதற்கான பொதுவான கலாச்சார எதிர்பார்ப்புகளை அவர் முன்வைத்தார்:

> எவரேனும் ஒரு வரலாற்றை எழுத முனைந்தால்… முதலாவதாக, எல்லாவற்றிற்கும் எல்லா வகையான புத்தகங்களை வைத்திருப்பதும்…. எழுத்தாளர்களின் பேனாக்களில் இருந்து தப்பித்து, மனிதர்களின் நினைவுகளில் மிகவம் உண்மையாகப் பாதுகாக்கப்படும் விவரங்களைக் கேட்டு தெரிந்து கொள்வது மிகவும் அவசியமானது, இல்லையென்றால் அவனுடைய வேலை பல விஷயங்களில் குறையாக இருக்கக் கூடும்.

நாம் இங்கு பார்க்கிறபடி, நம்பகமான வரலாற்றாசிரியர் நம்பகமான ஆதாரங்களை அணுக வேண்டும் என்று புளூடார்க் உறுதியாக நம்பினார். எழுதப்பட்ட விவரங்கள் மற்றும் வாய்வழியாக பெறப்பட்டவை உட்பட கிடைக்கக்கூடிய அனைத்து ஆதாரங்களையும் கவனமாகக் கணக்கிடுவதில் அவர் அதிக மதிப்பைக் கொண்டிருந்தார்.

சுவிசேஷ எழுத்தாளர்கள் ஒவ்வொருவரும் இயேசுவின் வாழ்க்கையை நேரில் கண்ட சாட்சிகளாகவோ அல்லது இயேசுவின் வாழ்க்கையை நேரில் கண்ட சாட்சிகளுடன் நேரடியாகவோ தொடர்பு கொண்டிருந்தவர்களாகவோ இருந்தனர். மத்தேயுவும் யோவானும் இயேசுவின் சீஷர்களாக இருந்ததால், அவர்கள் பதிவு செய்த பல நிகழ்வுகளில் அவர்கள் உடனிருந்தனர். மாற்கு பேதுருவின் நெருங்கிய தோழராக இருந்தார், மேலும் அவர் மூலம் நேரடியாக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கற்றுக்கொண்டார். லூக்கா பவுலுடன் பயணித்து, அவருடைய சுவிசேஷத்திற்காக நம்பகமான நேரில் கண்ட சாட்சிகளைத் தேடினார். லூக்கா 1:1-4 இல் லூக்கா எழுதியதைக் கவனியுங்கள்:

> நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால், ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று (லூக்கா 1:1-**4**).

## உண்மைத்தன்மை

இரண்டாவதாக, சுவிசேஷங்களின் வரலாற்று நம்பகத்தன்மையை அவர்களின் படைப்புகளில் உயர்ந்த மட்டத்தில் நேர்மையாகக் காணலாம். நல்ல வரலாற்றுக்கான பண்டைய தரங்களின்படி, வரலாற்றாசிரியர்கள் வரலாற்றை எழுதும் விதத்தில் நேர்மையாக இருக்க வேண்டும். சித்தரிக்கப்படும் செய்திக்கு சாதகமாக இல்லாத விவரங்கள் உட்பட பல்வேறு விவரங்களை வரலாற்றை பதிவு செய்பவர்கள் பதிவிட வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த வகையில், இயேசுவின் சீஷர்களின் தோல்விகளை சுவிசேஷ எழுத்தாளர்கள் அடிக்கடி விவரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. மத்தேயு மற்றும் யோவான் அவர்களின் சொந்த தோல்விகளையும் கூட விவரிக்க நேர்ந்தது. மாற்கு 14:51-52 இல் உள்ள கெத்செமனே தோட்டத்திலிருந்து நிர்வாணமாக ஓடும் இளைஞன் மாற்கு தானே என்று சில வியாக்கியான அறிஞர்கள் சொல்வது சரியென்றால், மாற்கு தனது சொந்த குறைபாடுகளையும் விவரித்தார் என்பது இங்கே தெளிவாகிறது. விதிவிலக்கு இல்லாமல், அனைத்து சுவிசேஷ எழுத்தாளர்களும் ஒட்டுமொத்தமாக இயேசுவின் சீஷர்களின் தோல்விகளை அம்பலப்படுத்தினர், குழந்தையாக இருந்த தங்கள் சபையின் தலைவர்கள் பரிபூரணமானவர்கள் அல்ல என்பதை ஒப்புக்கொண்டனர்.

ஒரு உதாரணமாக, மாற்கு 6:51-52, 5,000 பேருக்கு இயேசு அற்புதமாக உணவளிப்பதை சீஷர்கள் புரிந்து கொள்ளத் தவறியதை பதிவு செய்கிறது:

> அவர்கள் தங்களுக்குள்ளே மிகவும் பிரமித்து ஆச்சரியப்பட்டார்கள். அவர்களுடைய இருதயம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கடினமுள்ளதாயிருந்தபடியினால் அப்பங்களைக்குறித்து அவர்கள் உணராமற்போனார்கள் (மாற்கு 6:51-52).

அநேக நேரங்களில், சுவிசேஷ எழுத்தாளர்கள் இயேசுவினுடைய சீஷர்களின் தவறான புரிதல்களையும் தார்மீக தோல்விகளையும் அறிவித்தனர். ஆனால் இந்த தோல்விகளைக் குறிப்பிடுவது சபைத் தலைவர்களின் அதிகாரத்தையும் மரியாதையையும் குறைத்துவிடும் எனில், சுவிசேஷ எழுத்தாளர்கள் அதை ஏன் செய்தார்கள்?

> சுவிசேஷங்களில் சீஷர்கள் முழுமையற்றவர்களாகவும், முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாதவர்களாகவும் காட்டப்படுவதால், பல வாசகர்கள் கவலைப்படுகிறார்கள். சுவிசேஷ பாரம்பரியத்தின் நம்பகத்தன்மையை இது சுட்டிக்காட்டுகிறது. உண்மையில், சபையின் ஆரம்பகாலத் தலைவர்களை மோசமானவர்களாக காட்டாவிட்டாலும், குறைந்த பட்சம் மிக நல்லவர்களாக இல்லையென்பதை காட்டும் விஷயங்களை உள்ளடக்குவதற்கு நமது சுவிசேஷ எழுத்தாளர்கள் தயாராக இருந்தனர். எனவே, ஒரு வகையில் இது நமது சுவிசேஷங்களின் நம்பகத்தன்மை மற்றும் துல்லியத்திற்கு ஒரு சான்றாகும்.
>
> – Dr. டேவிட் ஆர். பாவுர்

> சீஷர்கள் தங்கள் சொந்தக் கதைகளில் தங்களைத் தாங்களே மோசமாகக் காட்டிக்கொள்ளும் போக்கு சுவிசேஷங்களின் நம்பகத்தன்மைக்கான வலுவான வாதங்களில் ஒன்றாகும் என்பதை நான் உங்களுக்கு பரிந்துரைக்கிறேன். பாபிலோன் அல்லது அசீரியாவின் ராஜாக்கள் அல்லது ரோம பேரரசர்களின் பழங்கால வரலாறுகளை நீங்கள் படித்தால், ”இதோ எனது புகழ்பெற்ற வெற்றிகள்!” என்று அவர்கள் வெற்றி மேல் வெற்றி பெறுவதைப் பற்றி மட்டுமே அதில் குறிப்பிடப்பட்டிருக்கும். எனவே இப்போது, நிச்சயமாக, நாம் திரும்பிப் பார்த்து, சரி, உண்மையில் என்ன நடந்தது? என்று சொல்கிறோம். நாம் சீஷர்களைப் பார்க்கிறோம், அவர்கள் இப்படித்தான் இருந்தார்கள்… இதைப் பற்றி யோசித்துப் பாருங்கள். அவர்களின் மதம் இப்படித்தான் இருந்தது: அவர்களுடைய மதத்தின் நாயகன் சிலுவையில் அறையப்பட்டவர்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சிலுவையிலறைப்படுதல் ரோமர்களுக்கு தேசத்துரோகம் மற்றும் அநீதிக்கு சான்றாகும். முதன்மை பார்வையாளர்களான யூதர்கள் முன்பாகவே சபிக்கப்பட்டதற்கான ஆதாரம் இது. இது நடக்காத வரை நீங்கள் இதை ஒருபோதும் செய்ய மாட்டீர்கள்.
>
> – Dr. டான் டோரியனி

## உறுதிப்படுத்துதல்

மூன்றாவதாக, சுவிசேஷ எழுத்தாளர்களின் நம்பகத்தன்மையின் மீதான நமது நம்பிக்கை மற்ற வரலாற்று ஆதாரங்களின் உறுதிப்படுத்தல் மூலம் பலப்படுத்தப்படுகிறது. ரோம மற்றும் யூத வரலாற்றாசிரியர்கள் சுவிசேஷ கதைகளின் பல கூற்றுக்களை உறுதிப்படுத்தினர், மேலும் நவீன தொல்லியல் கூட அவர்களின் பதிவுகள் உண்மை என்பதற்கான ஆதாரங்களைக் கண்டறிந்துள்ளன.

உதாரணமாக, கிரேக்க-ரோம வரலாற்றாசிரியர்களான ப்ளினி தி யங்கர், சூட்டோனியஸ், டாசிடஸ் மற்றும் ஜூலியஸ் ஆப்ரிக்கனஸ் ஆகியோர் இயேசுவின் வாழ்க்கை, அவர் சிலுவையில் அறையப்பட்டு மரணமடைதல் மற்றும் அவரின் நீடித்த செல்வாக்கு பற்றிய சில அடிப்படை தரவுகளைக் குறிப்பிடுகின்றனர்.

> ஆகவே, யூத வரலாற்றாசிரியர் யோசிபஸ், கி.பி முதல் நூற்றாண்டில் ரோம அரசாங்கத்திற்காக யூதர்களின் வரலாற்றை எழுதினார், அவர் இயேசு கிறிஸ்து இருப்பதாகவும், அவரை பின்பற்றுபவர்கள் இருப்பதாகவும் குறிப்பிடுகிறார். கி.பி. முதல் நூற்றாண்டில் ரோம வரலாற்றாசிரியர் டாசிடஸ், யோசிபஸ் இருந்த அதே காலகட்டத்தில், இயேசு கிறிஸ்துவைப் பற்றி எழுதினார், மேலும் இயேசுவை சிலர் பின்பற்றினார்கள் என்றும் குறிப்பிடுகிறார். யூத பாரம்பரிய புத்தகமான டால்முட் கூட இயேசு இருந்ததாகக் குறிப்பிடுகிறது.
>
> – Dr. ஸ்டீவன் ட்சூகலஸ்

> முதல் நூற்றாண்டு யூத பாலஸ்தீனத்தைப் பற்றி நாம் அறிந்ததை விட இப்போது நாம் அதிகம் அறிந்திருக்கிறோம் என்ற பொருளில், சுவிசேஷங்களின் நம்பகத்தன்மையை நாம் 50 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட சிறந்ததாகக் கருதுவதற்கு ஒரு பொதுவான வழி உள்ளது என்று நான்

நினைக்கிறேன். சவக்கடல் சுருள்கள் போன்ற இலக்கியங்களின் கண்டுபிடிப்பு மூலமாகவும், தொல்லியல் மூலமாகவும் நாம் அறிவோம். மேலும், புனித பூமியில் தொல்லியல் ஒரு வேகத்தைத் தொடர்கிறது – தொடர்ந்து புதிய கண்டுபிடிப்புகள் வருகின்றன. எனவே, இயேசுவின் ஊழியம் நடந்த சூழலைப் பற்றி நமக்கு நன்றாகவே தெரியும். சுவிசேஷங்கள் கூறும் விஷயங்கள் அந்தச் சூழலில் நம்பகத்தன்மையுடன் பொருந்துமா என்று நாம் கேட்கக்கூடிய அனைத்து வகையான வழிகளும் உள்ளன. அந்த குறிப்பிட்ட சூழலில் இயேசுவை ஒரு யூத ஆசிரியராகப் பார்ப்பது அர்த்தமுள்ளதாக இருக்கிறதா? மேலும், ஒட்டுமொத்தமாக, இது நன்றாகப் பொருந்துகிறது என்று சொல்லலாம் என்று நினைக்கிறேன். 66 முதல் 70 வரை யூத கிளர்ச்சிக்குப் பிறகு யூத பாலஸ்தீனத்தின் நிலைமைகள் தீவிரமாக மாறிவிட்டன என்பதை நாம் நினைவில் கொள்ள முடியும். எனவே, யூதக் கிளர்ச்சிக்குப் பிறகு சுவிசேஷங்கள் வெறுமனே ஒரு சூழ்நிலையைப் பிரதிபலிப்பதாக இல்லாமல், சுவிசேஷங்கள் அந்தக் காலகட்டத்திற்குப் பொருந்துமா என்பதைச் சோதிப்பதற்கான ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் நம்மிடம் உள்ளது. முதல் நூற்றாண்டின் தொடக்கத்தில் யூத மதத்தில் நமக்குத் தெரிந்த சூழ்நிலையுடன் தொடர்புடைய அனைத்து தகவல்களையும் நாம் எதிர்பார்க்க மாட்டோம்.

– Dr. ரிச்சார்ட் பாக்கம்

## பயிற்சி

சுவிசேஷ பதிவுகளை நம்புவதற்கான நான்காவது காரணம், இயேசுவின் சீஷர்கள் பெற்ற பயிற்சியாகும், அவருடைய வார்த்தைகள் மற்றும் செயல்களின் துல்லியமான பதிவை எவ்வாறு பாதுகாப்பது என்பதை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்க வேண்டும்.

யூத கலாச்சாரத்திற்குள், சீஷத்துவம் என்பது நன்கு நிறுவப்பட்ட வாழ்க்கை முறையாகும். உண்மையில், சீஷன் என்பதற்கான எபிரெய வார்த்தை டால்மிட் ஆகும், அதாவது மாணவன் அல்லது கற்பவன் என்பது இதன் அர்த்தம் ஆகும். குறிப்பாக, ஒரு சீஷன் ஒரு குறிப்பிட்ட குரு அல்லது ரபியின் மாணவன் ஆவான். மேலும், இயேசுவின் நாளின் யூத கலாச்சாரத்தில், ஒரு ரபியிடம்

கற்றுக்கொள்வதற்கான முக்கிய பயிற்சிகளில் ஒன்று மனப்பாடம் செய்வதாகும். மேலும் அவருடைய சீஷர்களின் கடமைகளில் ஒன்று, தங்கள் ஆசிரியரின் வார்த்தைகளையும் ஞானத்தையும் கற்றுக்கொள்வது ஆகும்.

லூக்கா 6:40 இல் இயேசு தம் சீஷர்களிடம் கூறிய வார்த்தைகளைக் கவனியுங்கள்.

> சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான் (லூக்கா 6:40).

தம்மைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் அவருடைய போதனைகள் மற்றும் செயல்களுக்கு ஏற்ப படிக்கவும், கற்றுக்கொள்ளவும், தங்கள் வாழ்க்கையை வடிவமைக்கவும் வேண்டும் என்று இயேசு கூறினார்.

இயேசுவுக்கு மிக நெருக்கமான பன்னிரண்டு சீஷர்களும் இயேசுவின் போதனைகளைக் கற்றுக்கொள்வதில் பெரும் பொறுப்பைக் கொண்டிருந்தனர், அதே சமயம் இயேசுவிடமிருந்து கற்றுக்கொண்ட பலர் அவருடைய போதனைகளில் பெரும்பகுதியை மனப்பாடம் செய்திருக்கலாம்.

## இறையியல் நம்பிக்கைகள்

ஐந்தாவது, சுவிசேஷ எழுத்தாளர்களுக்கு உண்மையான, நம்பகமான பதிவின் அவசியத்தை வலியுறுத்தும் வலுவான இறையியல் நம்பிக்கைகள் இருந்தன என்ற உண்மையை நாம் ஒருபோதும் குறைத்து மதிப்பிடக்கூடாது. உதாரணமாக, யோவான் 20:31 இல், அப்போஸ்தலன் இந்த வார்த்தைகளை எழுதினார்:

> இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவான் 20:31).

இந்த வேத பகுதியில், இயேசுவைப் பற்றிய *சத்தியத்தை* அறிந்து ஏற்றுக்கொண்டால் மட்டுமே மக்கள் தேவனுடைய ஜீவனின் வரத்தைப் பெற முடியும் என்று யோவான் தெளிவாகக் கூறினார்.

இதேபோல், மத்தேயு தனது சுவிசேஷத்தின் 28:19-20 இல் இயேசுவின் இந்த வார்த்தைகளை பதிவு செய்தார்:

> ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே

> அவர்களுக்கு **ஞானஸ்நானங்**கொடுத்து நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் (மத்தேயு 28:19-20).

இயேசு கட்டளையிட்ட அனைத்தையும் போதிக்கும் பொறுப்பு இயேசுவின் சீஷர்களுக்கு இருப்பதாக மத்தேயு இங்கே கூறினார். இயேசுவை உண்மையாகப் பின்பற்றுபவர்களாக, அவர் செய்ததையும் சொன்னதையும் பற்றிய உண்மையான விவரங்களைக் கொடுக்க வேண்டிய அவசியத்தை அவர்களால் புறக்கணிக்க முடியவில்லை.

சுவிசேஷ எழுத்தாளர்கள் இயேசுவின் வாழ்க்கை நிகழ்வுகளை அவற்றின் வரலாற்று மதிப்பிற்காக வெறுமனே பதிவு செய்யவில்லை. மாறாக, அவர்மீது விசுவாசம் வைப்பது என்பது இயேசுவைப் பற்றிய வரலாற்று உண்மைகளை வெறுமனே அறிந்துகொள்வதைவிட மேலானது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். ஆனால் உண்மையான விசுவாசம் தவறான அல்லது தவறான வரலாற்றுப் பதிவை அடிப்படையாகக் கொண்டிருக்க முடியாது என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். அவர்கள் இயேசுவின் வார்த்தைகளையும் செயல்களையும் தெளிவாகவும் துல்லியமாகவும் வெளிப்படுத்தினர், ஏனென்றால் வரலாற்றின் இயேசுவான உண்மையான இயேசுவை தங்கள் வாசகர்கள் நம்ப வேண்டும் என்று அவர்கள் விரும்பினர்.

## பரிசுத்த ஆவியானவர்

ஆறாவது, அனைத்து வேதாகம எழுத்தாளர்களைப் போலவே, சுவிசேஷ எழுத்தாளர்களும் இயேசுவின் வார்த்தைகள் மற்றும் செயல்களைப் பற்றிய தங்கள் பதிவுகளை சொந்தமாக எழுத அனுமதிக்கப்படவில்லை. பரிசுத்த ஆவியானவர் இந்த செயலில் அவர்களை வழிநடத்தினார்.

> வேதாகமம் பரிசுத்த ஆவியானவரால் அருளப்படுதல் என்பது மிகவும் முக்கியமான கோட்பாடாகும், ஏனெனில் இது அனைத்து வேதத்திற்கும் ஒரு பிரதான எழுத்தாளரை வழங்குகிறது. எனவே, நாம் சுவிசேஷங்களைப் பார்க்கும்போது, நான்கு வெவ்வேறு எழுத்தாளர்கள் இயேசுவைப் பற்றி நான்கு வெவ்வேறு கண்ணோட்டங்களை வழங்குவதைக் காணும்போது, அந்த கண்ணோட்டங்களை நாம் பாராட்ட வேண்டும், ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் அனைவரையும் எழுத வழிநடத்தினார் என்பதை உணர வேண்டும். இறையியல் ரீதியிலும் அவர்களின்

> நோக்கங்களிலும் வித்தியாசங்கள் இருந்தது. மேலும் அவர்கள் எழுதும் பார்வையாளர்கள், அவர்களின் பின்னணிகள் மற்றும் இயேசுவோடு அவர்களுக்கிருந்த அனுபவங்கள் ஆகிய எல்லாவற்றிலும் வித்தியாசங்கள் இருந்தன. ஆனால் மனித எழுத்தாளர்களால் எழுதப்பட்டதால் இருக்கக்கூடிய பன்முகத்தன்மையைக் கொண்டிருக்கும் அதே வேளையில் அவைகளில் ஒரு அற்புதமான ஒற்றுமையையும் காண முடியும். வேதம் ஆவியானவரால் அருளப்பட்டது என்கிற உண்மை வேதம் எழுதப்பட்டதில் உள்ள மனித ஈடுபாட்டை எந்த விதத்திலும் அகற்றாது, மனிதர்களை உபயோகித்து அவர் விரும்பிய காரியத்தை தேவன் சரியாகச் செய்கிறார் என்பதே இதன் அர்த்தமாகும்.
>
> – Dr. கே. எரிக் தோனேஸ்

உதாரணமாக, யோவான் 14:25-26 இல் உள்ள இயேசுவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் (யோவான் 14:25-26).

இயேசுவின் சீஷர்கள் மனப்பாடம் செய்வதில் எவ்வளவு சிறந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் எல்லாவற்றையும் மனிதில் வைத்திருக்க வாய்ப்பில்லை. அதனால்தான் இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியானவரை வாக்குத்தத்தம் செய்து அனுப்பினார். இயேசு என்ன செய்தார், என்ன சொன்னார் என்று பல நூற்றாண்டுகளாக சபை தெரிந்துகொள்ள வேண்டியதை நினைவுபடுத்த பரிசுத்த ஆவி அவர்களுக்கு உதவினார். யோவான் தனது சுவிசேஷத்தின் 21:25 இல் எழுதியது போல்:

> இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு. அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன் (யோவான் 21:25).

> இயேசு யார் என்று நீங்கள் மக்களிடம் பேசும்போது, சிலர் அவரை ஒரு ரபி என்றும் ஒரு ஆசிரியர் என்றும் சொல்லலாம், அல்லது சிலர் வெவ்வேறு உலக மதங்கள் மற்றும் வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்தவர்கள் அவரைப் பற்றி பல்வேறு விஷயங்களைக் கூறுவது சுவாரஸ்யமானது. ஆனால் தேவனின் ஞானத்தில், தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியின் மூலம், நான்கு சுவிசேஷங்களில் நம்பிக்கைகளைக் குறித்து எழுத வழிவகுத்தார், இதனால் நாம் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய சுவசேஷங்களைக் கொண்டிருக்கிறோம் – இந்த சுவிசேஷங்களில் உள்ள விவரங்கள் எழுத்தாளர் மூலமாகவோ அல்லது வேறு மூலங்கள் மூலமாகவோ நமக்கு வந்து சேர்ந்தன – நம்மிடம் ஒரு உறுதியான நேரில் கண்ட சாட்சி உள்ளது, பரிசுத்த ஆவியானவரால் பாதுகாக்கப்பட்டு நம்மிடம் வந்தது, இது ஒரு தரமாக செயல்படுகிறது, எனவே “சரி இயேசு இதைச் சொன்னார் அல்லது இயேசு இதைச் செய்வார் அல்லது இயேசு அதைச் செய்ய மாட்டார்” என்று யாராவது சொன்னால், மறுக்க முடியாத இந்த தகவல்களுக்கு நாம் சென்று அதில் என்ன எழுதியிருக்கிறது என்று பார்க்க முடியும், மேலும் நமது விசுவாசத்திற்கான தொடுகல்லைக் தேவன் நமக்குத் தந்துள்ளார்.
>
> – Dr. ராபர்ட் எல். ப்ளம்மர்

# சபையில் அவற்றின் நிலை

இப்போது நாம் சுவிசேஷங்களின் இலக்கியத் தன்மையைப் பற்றிப் பேசிவிட்டோம், அவை அதிகாரப்பூர்வமாக எழுதப்பட்ட நூல்களாக சபையில் அவற்றின் நிலை என்ன என்பதைப் பார்க்க நாம் தயாராக இருக்கிறோம். சுவிசேஷங்களின் அமைப்பு மற்றும் அவற்றின் நம்பகத்தன்மையை தேவனுடைய வார்த்தையாகக் கருத்தில் கொண்டு, சபையில் உள்ள சுவிசேஷங்களின் நிலையை ஆராய்வோம். முதலில் அவை தொகுக்கப்பட்டதைக் குறித்துப் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# தொகுத்தல்

சுவிசேஷங்களின் தொகுப்பைப் பற்றி நாம் பேசும்போது, அவை எழுதப்பட்ட விதம் நம் மனதில் உள்ளது. அவற்றின் எழுத்தாளர்கள் யார்? ஏன் இந்தப் புத்தகங்களை எழுதினார்கள்? எப்படி இந்தப் புத்தகங்களை எழுதினார்கள்? இது போன்ற கேள்விகளை கிறிஸ்தவர்கள் ஆராய்வது முக்கியம், ஏனெனில் எண்ணற்ற வியாக்கியானம் செய்பவர்கள் இந்த புத்தகங்களின் தெய்வீக அதிகாரத்தை குறைக்க மனித செயல்முறைகளில் கவனம் செலுத்தியுள்ளனர். ஆனால் நற்செய்தி என்னவெனில், சுவிசேஷங்கள் மனிதர்களின் படைப்புகள் மட்டுமல்ல, தேவனுடைய வார்த்தையும் கூட என்பதில் நம்பிக்கையுடன் இருப்பதற்கு, கவனமாக ஆராய்வது என்பது முக்கியமானதாகும்.

சுவிசேஷங்களின் தொகுப்பு தொடர்பான மூன்று விஷயங்களைப் பார்ப்போம். முதலில், சுவிசேஷங்களில் உள்ள பல்வேறு விவரங்களுக்கு இடையே உள்ள ஒற்றுமைகளை ஆராய்வோம். இரண்டாவதாக, இந்த ஒற்றுமைகளை விளக்குவதற்கு எழுந்த சில கலவை கோட்பாடுகளை நாம் ஆய்வு செய்வோம். மூன்றாவதாக, இந்தக் கோட்பாடுகளுக்கு நாம் எந்த உறுதியுடன் இருக்க வேண்டும் என்பது குறித்து சில கருத்துக்களை வழங்குவோம். சுவிசேஷங்களுக்கு இடையே உள்ள ஒற்றுமைகளை கருத்தில் கொண்டு ஆரம்பிக்கலாம்.

## ஒற்றுமைகள்

தனித்தனியாக இயற்றப்பட்டாலும், மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகியோரின் சுவிசேஷங்களிலுள்ள விவரங்கள் பெரும்பாலும் ஒன்றாக தொகுக்கப்பட்டு, ஒன்றாக தொகுக்கப்பட்ட சுவிசேஷங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ”சினோப்டிக்” என்ற வார்த்தையின் அர்த்தம், ”ஒன்றாகப் பார்ப்பது” என்று பொருள்படும், மேலும் இந்தப் பதம் இந்த சுவிசேஷங்களைக் குறிக்க பயன்படுத்தப்பட்டது, ஏனெனில் அவை பெரும்பாலும் ஒரே விஷயங்களை உள்ளடக்கியிருக்கின்றன. இயேசுவின் வார்த்தைகள் மற்றும் செயல்களின் விவரங்கள் திரும்பத் திரும்ப இதில் வருகின்றன. அவைகளில் இயேசு கூறின காரியங்கள் வரும்போது, அவைகளில் பெரும்பாலும் அதே வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, திமிர்வாத நோயாளியை இயேசு குணப்படுத்தியதைக் கவனியுங்கள். மத்தேயு 9:6 இல், கர்த்தருடைய வார்த்தைகள் மற்றும் செயல்கள் பற்றிய இந்த விவரங்களை வாசிக்கிறோம்:

> ”பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும்” என்று



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: "நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ" என்றார் (மத்தேயு 9:6).

இப்போது மாற்கு 2:10-11 ஐக் கவனியுங்கள்.

> "பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும்" என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: "நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ" என்றார் (மாற்கு 2:10-11).

மேலும், மீண்டும், லூக்கா 5:24 இல், இதைப் வாசிக்கிறோம்:

> "பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும்" என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: "நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ" என்றார் (மாற்கு 2:10-11).

இந்த எடுத்துக்காட்டில், முதல் மூன்று சுவிசேஷங்களும் அந்த கதையில் கிட்டத்தட்ட அதே வார்த்தைகளை உபயோகிப்பதை நம்மால் காண முடியும். முதல் மூன்று சுவிசேஷங்களில் குறைந்தது இரண்டில் காணப்படும் பிற இணையான கதைகள் பின்வருமாறு: குஷ்டரோகியைக் குணப்படுத்துதல், கப்பர்நகூமில் பிசாசை துரத்துதல், பேதுருவின் மாமியாரை குணப்படுத்துதல், கடலில் புயலை அமைதிப்படுத்துதல், யவீருவின் இறந்த மகள் உயிரோடு எழுப்பப்படுதல், பன்னிருவர் மீது அதிகாரத்தை ஒப்படைத்தல், இயேசு தண்ணீரில் நடப்பது, ஒரு மனிதனின் சூம்பின கையை குணப்படுத்துதல், ஐயாயிரம் பேருக்கு ஒரு சில அப்பங்கள் மற்றும் சில மீன்களால் உணவளித்தல் மற்றும் இயேசு மறுரூபமடைதல்.

> மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகிய மூன்று சுவிசேஷங்களும் பெரும்பாலும் ஆங்கிலத்தில் சினோப்டிக்ஸ் என்று அழைக்கப்படுகின்றன, ஏனெனில் அவை உண்மையில் ஒத்த கண்ணோட்டங்கள், ஒத்த கண்ணாடிகள் போன்றவற்றிலிருந்து விஷயங்களைப் பார்க்கின்றன. ஒன்று போதுமானதாக இருக்கும் போது நமக்கு ஏன் மூன்று தேவை? என்கிற உணர்வை சில சமயங்களில் அது தரலாம். முதல் மூன்று சுவிசேஷங்களில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏதேனும் ஒன்றை இழப்பது வருத்தத்திற்குரிய விஷயமாக இருக்கும், ஏனெனில் அவை ஒவ்வொன்றும் சற்று வித்தியாசமான பங்களிப்பை வழங்குகின்றன, மேலும் அவற்றுக்கிடையேயான சில வேறுபாடுகளைப் பார்ப்பது தகுதியானதாகும். மாற்கு சுவிசேஷம் ஒரு சுவிசேஷமாகும், இது மற்ற சில சுவிசேஷங்களை விட அதிக நிறத்தைப் பெற்றுள்ளது மற்றும் உண்மையில் சில தனிப்பட்ட கதைகளை அதிக விளக்கமாக சொல்கிறது. இது ஒரு சிறிய சுவிசேஷமாக இருந்தாலும், அதன் தனிப்பட்ட கதைகள் விவரமாக சொல்லப்படுகின்றன. மத்தேயு தான் அந்தக் கதைகளை மிகக் குறுகிய திசைகாட்டியாகப் பிழிந்தார், ஏனெனில் அவர் தனது சுவிசேஷத்தில் இன்னும் பலவற்றைச் சேர்க்க முயற்சிக்கிறார். குறிப்பாக, மத்தேயு இயேசுவின் போதனையை வைக்க முயற்சிக்கிறார், ஆனால் மாற்குவின் சுவிசேஷம் விசித்திரமாக, இயேசுவின் பெரும்பாலான போதனைகளைத் தவிர்க்கிறது. எனவே, மத்தேயுவின் சுவிசேஷம் நமக்கு மிகவும் அதிகாரம் மிக்க இயேசுவை, போதிக்கும் இயேசுவை வெளிப்படுத்துகிறது, மேலும் இயேசுவின் போதனையின் சுருக்கமான தொகுப்பை மத்தேயுவின் சுவிசேஷம் வெளிப்படுத்துகிறது. ஆனால் லூக்கா நமக்கு என்ன கொடுத்தார்? லூக்கா நமக்கு இன்னும் கூடுதலான போதனைகளைக் கொடுத்திருக்கிறார். லூக்கா நமக்கு குறிப்பாக மத்தேயுவை விட அதிகமான உவமைகளைக் கொடுத்துள்ளார். மேலும் அவர் எல்லா வகையான மக்களுடனும் தொடர்பு கொள்ளும் மிகவும் அன்பான, அக்கறையுள்ள இயேசுவின் கற்பனை உருவத்தையும் கொடுத்தார். லூக்கா ஒரு மருத்துவர் மட்டுமல்ல, ஒரு உளவியலாளரும் கூட என்று சிலர் நினைக்கிறார்கள்; மனித உணர்வுகளை நன்றாக வெளிப்படுத்தக் கூடியவராக இருந்தார். எனவே, மூன்று சுவிசேஷங்களில், மூன்று மிகவும் விலையுயர்ந்த, வெவ்வேறு புத்தகங்கள் கிடைத்துள்ளன, அவை ஒவ்வொன்றையும் நாம் உயர்வாக எண்ண வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

– Dr. பீட்டர் வாக்கர்

இயேசுவின் வாழ்க்கையைப் பற்றிய மூன்று சுவிசேஷங்கள் நமக்கு ஒரே மாதிரியாக இருப்பதற்கான அடிப்படைக் காரணம்,

> இயேசு யார் என்பதன் செழுமையும் அழகும்தான் என்று நான் நினைக்கிறேன். ஒரே சுவிசேஷ புத்தகத்தால் அவரைப் பற்றிய முழு விவரங்களைத் தர முடியாது. ஆகவே, தேவன் என்ன எண்ணினார் என்பதை நாம் சிந்திக்கும்போது, இயேசு எதை நிறைவேற்றினார், என்ன சொன்னார் மற்றும் என்ன செய்தார் என்பதன் முக்கியத்துவத்தை எந்த ஒரு எழுத்தாளராலும் நமக்கு முழுமையாகத் தர முடியாது. இருப்பினும், மூன்று சுவிசேஷங்களில் உள்ள வேறுபாடுகளை நாம் உணர வேண்டும் என்பதையும் நான் கூடுதலாகச் சேர்க்க விரும்புகிறேன். ஆம், அவைகள் அடிப்படையில் ஒரே விஷயத்தைச் சொல்கின்றன, ஆனால் ஒவ்வொரு சுவிசேஷத்திலும் நுணுக்கங்களும் வண்ணங்களும் உள்ளன. எனவே, ஒருபுறம், அவைகள் இயேசு என்ன செய்தார், அவர் என்ன நிறைவேற்றினார் என்பதற்கான அடிப்படைக் கதையைச் சொல்கின்றன, அதே நேரத்தில், அவை இயேசுவின் வெவ்வேறு அம்சங்களை நமக்குக் காட்டுகின்றன. எனவே, இது ஒரு பலவண்ணக்காட்சி கருவி போன்றது, எல்லாம் பலவண்ணக்காட்சி கருவிக்குள் உள்ளது, ஆனால் நீங்கள் அதை வெவ்வேறு கோணங்களில் பார்க்கிறீர்கள், இயேசு யார் என்பதைப் பற்றிய வெவ்வேறு படங்களை நாம் காண்கிறோம். எனவே, இயேசுவைப் பற்றிய இந்த பன்முகக் காட்சியை நமக்குக் கொடுப்பதில், தேவனின் ஞானம், பரிசுத்த ஆவியின் அகத்தூண்டுதலைக் காண்கிறோம்.
>
> – Dr. தாமஸ் ஆர். ஸ்கிரைனர்

முதல் மூன்று சுவிசேஷங்களைப் போலன்றி, யோவானுடைய சுவிசேஷத்தின் பெரும்பகுதி தனித்துவமானது. இயேசு தண்ணீரில் நடந்ததைப் பற்றியும் ஐயாயிரம் பேருக்கு உணவளித்தார் என்பதையும் யோவான் பதிவு செய்திருந்தாலும், முதல் மூன்று சுவிசேஷங்களில் பதிவு செய்யப்படாத பல நிகழ்வுகளை அவர் சேர்த்துள்ளார். உதாரணமாக, இயேசு தண்ணீரை திராட்சரசமாக மாற்றியதையும், சமாரிய ஸ்திரீயுடன் இயேசுவின் உரையாடலையும், இயேசு லாசருவை மரித்தோரிலிருந்து எழுப்பியதையும் யோவான் பதிவு செய்தார்.

ஆனால் நான்கு சுவிசேஷங்களில் இயேசுவின் ஊழியம் மற்றும் வாழ்க்கை பற்றிய கதைகள் வேறுபட்டாலும், இயேசுவின் ஞானஸ்நானம், அவருடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சீஷர்களுடன் இயேசுவின் கடைசி இராப்போஜனம், இயேசுவின் சிலுவை மரணம் மற்றும் மரித்தோரிலிருந்து இயேசுவினுடைய உயிர்த்தெழுதல் ஆகியவை நான்கு சுவிசேஷங்களிலும் இருக்கின்றன.

சுவிசேஷங்களுக்கு இடையே உள்ள ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகள் பல போட்டி விளக்கங்களுக்கு வழிவகுத்தன. எனவே, இப்போது சுவிசேஷங்களின் தொகுப்பைப் பற்றிய கோட்பாடுகளுக்கு திரும்புவோம்.

## தொகுப்பைக் குறித்த கோட்பாடுகள்

முதல் மூன்று சுவிசேஷங்களுக்கு இடையே உள்ள பல ஒற்றுமைகளின் காரணமாக, அறிஞர்கள் அவற்றின் தொகுப்பு வரலாறு குறித்து பல கோட்பாடுகளை உருவாக்கியுள்ளனர். இந்த கோட்பாடுகள் பெரும்பாலும் சிக்கலானவை மற்றும் நாம் முதலில் அவற்றைப் படிக்கத் தொடங்கும் போது அவை குழப்பமாக இருக்கும். மிகவும் பிரபலமான கோட்பாடுகளை நாம் இவ்வாறு சுருக்கமாகக் கூறலாம்: பெரும்பாலான வியாக்கியானம் செய்பவர்கள் மாற்கு முதலில் எழுதப்பட்டதாகவும் மத்தேயுவும் லூக்காவும் மாற்குவையும் பிற மூலங்களையும் பயன்படுத்தினதாகவும் நம்புகிறார்கள். ஆனால் மற்ற வியாக்கியான அறிஞர்கள் மத்தேயு முதலில் எழுதப்பட்டதாகவும், மாற்கு மத்தேயுவிலிருந்து விவரங்களைப் பயன்படுத்தினார் என்றும், லூக்கா மத்தேயு மற்றும் மாற்கு இரண்டிலிருந்தும் விவரங்களைப் பயன்படுத்தினார் என்றும் நம்புகிறார்கள். இன்னும் சிலர் மத்தேயுவும் லூக்காவும் நம்மிடம் இல்லாத ஆதாரங்களை பயன்படுத்தினார்கள் என்றும், அவர்கள் இருவரிடமிருந்தும் மாற்கு விவரங்களை பயன்படுத்தியதாகவும் நம்புகிறார்கள். இந்த கோட்பாடுகளின் பொதுவான பண்புகளை ஒப்பிடுவது கூட கொஞ்சம் குழப்பமாக இருக்கும்.

மாறாக, யோவானின் தொகுப்பு மிகவும் எளிமையானது. பெரும்பாலான வியாக்கியான அறிஞர்கள் அவர் முதல் நூற்றாண்டின் இறுதியில் எழுதியதாக ஒப்புக்கொள்கிறார்கள், மேலும் குறைந்தபட்சம் ஒன்று அல்லது மற்ற மூன்று சுவிசேஷங்களின் விவரங்களையும் நன்கு அறிந்திருந்தார். சில சமயங்களில் அவர் முதல் மூன்று சுவிசேஷங்களில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருந்த பல விஷயங்களைத் திரும்பத் திரும்பச் சொல்வதைத் தவிர்த்தார், மேலும் அவர் ஊழியம் செய்த சமூகங்களுக்கு மிகவும் பொருத்தமான கூடுதல் தகவல்களை வழங்க முயன்றார்.

இந்த தொகுப்பு கோட்பாடுகளை மனதில் கொண்டு, நாம் எந்த உறுதியுடன் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைப் பற்றி பேசலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## உறுதி

ஆரம்பத்தில், வேதாகம எழுத்தாளர்கள் பெரும்பாலும் வாய்மொழி மற்றும் எழுதப்பட்ட மரபுகளைப் பயன்படுத்தினர் என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். மேலும் இது அவைகள் ஆவியானவரால் அருளப்பட்டவை என்பதையோ அல்லது அவைகளின் அதிகாரத்தையோ சமரசம் செய்யவில்லை. எனவே, சுவிசேஷ எழுத்தாளர்களில் எவரும் முந்தைய ஆதாரங்களை நம்பியிருப்பதில் கொள்கையளவில் எந்தத் தவறும் இல்லை. லூக்கா 1:1-3 இல் எழுதியது போல்:

> நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால், ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று (லூக்கா 1:1-3).

மற்ற அனைத்து சுவிசேஷ எழுத்தாளர்களும் இதே போன்ற ஆதாரங்களை அணுகியதாகத் தெரிகிறது, இருப்பினும் அவர்கள் லூக்கா செய்ததைப் போல வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை. மாற்கு முதலில் எழுதியதாக பெரும்பாலான வியாக்கியான அறிஞர்களுடன் சேர்ந்து நாமும் கருதினால், அவருக்கு முன்னர் எழுதப்பட்ட எந்த சுவிசேஷத்தையும் அவர் அணுகவில்லை என்று அர்த்தமாகிறது, ஆனால் அவர் நிச்சயமாக வாய்வழி மரபுகளைப் பயன்படுத்தினார், குறைந்தபட்சம் அவரது நெருங்கிய நண்பர் பேதுருவிடமிருந்து வாய்வழி மரபுகளைப் பெற்றுக்கொண்டார். லூக்காவும் மத்தேயுவும் மாற்குவின் சுவிசேஷத்தை ஒரு மாதிரியாகப் பயன்படுத்தியிருக்கலாம். இதைத் தவிர, இயேசுவின் வாழ்க்கை மற்றும் போதனைகளைக் குறித்த காரியங்கள் மத்தேயு மற்றும் யோவானின் நினைவுகளில் இருந்தன. மேலும் நாம் முன்பு பார்த்தது போல, நான்கு எழுத்தாளர்களும் தாங்கள் எழுதும்போது எந்த தவறும் நிகழாமலிருக்க பரிசுத்த ஆவியானவரால் மேற்பார்வை செய்யப்பட்டனர்.

சுருக்கமாக, சுவிசேஷங்களுக்கு இடையிலான உறவு பற்றிய கோட்பாடுகளை நாம் பாராட்ட முடியும். ஆனால் அவைகளின் அனைத்து நுணுக்கங்களையும் புரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தை நாம் உணரக்கூடாது அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றை உறுதியுடன் எடுத்துக்கொள்ள வேண்டும். சுவிசேஷ எழுத்தாளர்கள் ஒவ்வொருவரும் பல ஆதாரங்களில் இருந்து தகவல்களைப் பெறுவதற்கும், இயேசுவின் வாழ்க்கை

மற்றும் போதனைகளைப் பற்றிய நம்பகமான விவரங்களை உருவாக்குவதற்கும் திறன் பெற்றவர்கள் என்ற நம்பிக்கையை இந்தக் கோட்பாடுகள் நமக்கு வழங்குகின்றன. அவர்களின் தகவல்களில் ஒன்றுக்கு ஒன்று ஒத்திருப்பதைப் பார்க்கும்போது, எழுத்தாளர்களின் வெவ்வேறு கண்ணோட்டங்களைக் கருத்தில் கொள்ள வாய்ப்பு உள்ளது. எது முதலில் எழுதப்பட்ட சுவிசேஷம் என்பது இங்கே முக்கியமில்லை. மேலும், சுவிசேஷங்களில் ஒன்றில் மட்டுமே வரும் விஷயங்களைப் வாசிக்கும்போது, அந்தக் குறிப்பிட்ட எழுத்தாளரின் நோக்கத்தின் வெளிச்சத்தில் நாம் அதைப் வாசிக்கலாம்.

நான்கு சுவிசேஷங்களின் தொகுப்பைப் பரிசீலித்த பிறகு, அவற்றின் நம்பகத்தன்மையைப் பார்க்க நாம் தயாராக இருக்கிறோம்.

## நம்பகத்தன்மை

சபையின் ஆரம்ப நூற்றாண்டுகளில், அப்போஸ்தலர்களின் காலத்தில் எந்த புத்தகங்கள் உண்மையில் புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் என்பதில் சில கருத்து வேறுபாடுகள் இருந்தன. சில ஆரம்பகால சபைத் தலைவர்கள் புதிய ஏற்பாட்டில் உள்ள அனைத்து புத்தகங்களையும் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது நம்மிடம் உள்ள இருபத்தேழு புத்தகங்களுடன் வேறு சில புத்தகங்களைச் சேர்க்க வேண்டும் என்று மற்றவர்கள் நம்பினர்.

ஆனால் இந்த சர்ச்சைகள் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் புத்தகங்களை பாதிக்கவில்லை. இந்த நான்கு சுவிசேஷங்கள் மட்டும் தேவனுடைய உண்மையான சபைகளால் எப்போதும் அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

உதாரணமாக, கி.பி.185 முதல் 254 வரை வாழ்ந்த மூன்றாம் நூற்றாண்டு சபை பிதாவான ஒரிகன், புதிய ஏற்பாட்டில் இப்போது நம்மிடம் உள்ள நான்கு சுவிசேஷங்கள் மட்டுமே உண்மையானவை என்று வாதிட்டார்.

ஏறக்குறைய கி.பி.263 முதல் 340 வரை வாழ்ந்த சபை வரலாற்றாசிரியர் எசூபியஸ் என்பவரால், ஒரிகன் மேற்கோள் காட்டப்பட்டார். எக்லெஸியாஸ்டிகல் ஹிஸ்டரி, புத்தகம் 6, அதிகாரம் 25, பிரிவு 4 இல் எசூபியஸ் ஒரிகனைக் குறித்துக் கூறும் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> வானத்தின் கீழுள்ள சபையில் இந்த நான்கு சுவிசேஷங்கள் மட்டுமே சர்ச்சைக்குள்ளாகாதவைகளாகும்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு, கி.பி 130 முதல் 202 வரை வாழ்ந்த சபை பிதா ஐரேனியஸ், எகைன்ஸ்ட் ஹெரசீஸ் என்கிற தனது படைப்பில், புத்தகம் 3, அத்தியாயம் 11, பிரிவு 8 இல் நான்கு சுவிசேஷங்களைப் பற்றி கூட்டாகப் பேசினார். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்:

> நமக்கு இருக்கும் சுவிசேஷங்களின் எண்ணிக்கையை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்க முடியாது... மனிதர்களுக்கு வெளிப்பட்டவராகிய இயேசு, ஆனால் ஒரே ஆவியால் பிணைக்கப்பட்டவராக நான்கு அம்சங்களின் கீழ் நமக்கு சுவிசேஷத்தைக் கொடுத்தார்.

இந்த நான்கு சுவிசேஷங்களில் எந்த சுவிசேஷமும் யாராலும் நிராகரிக்கப்படவில்லை என்றும் இந்த நான்கு சுவிசேஷங்களைத் தவிர எந்த சுவிசேஷத்தையும் சபையின் ஆராதனையில் பயன்படுத்தியதாக தனக்குத் தெரியாது என்று ஐரேனியஸ் கூறினார்.

## நம்பகமான எழுத்தாளர்கள்

இந்த நான்கு சுவிசேஷங்களில் ஆரம்பகால சபைக்கு இருந்த தைரியமான நம்பிக்கைக்கு குறைந்தது மூன்று காரணங்கள் இருந்தன. முதலாவதாக, சபை சுவிசேஷங்களை நம்பகமானதாகப் பெற்றது, ஏனெனில் அவை அவற்றின் தலைப்புகளில் பெயரிடப்பட்ட நம்பகமான எழுத்தாளர்களால் எழுதப்பட்டன.

முதலில் யாரால் இந்த சுவிசேஷங்கள் எழுதப்பட்டன என்கிற உண்மை தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவை முதன்முதலில் வெளியிடப்பட்டபோது, அவைகளை முதலில் பெற்றவர்களுக்கு எழுத்தாளர்கள் யார் என்று தெரிந்திருக்கலாம் அல்லது எழுத்தாளர்களை அடையாளம் காணும் கடிதங்களுடன் விநியோகிக்கப்பட்டிருக்கலாம். ஆரம்ப காலத்திலிருந்தே, கிறிஸ்தவ நூல்கள் சுவிசேஷங்களை மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய பெயர்களுடன் தொடர்புபடுத்துகின்றன. புதிய ஏற்பாட்டிலிருந்து நல்ல நற்பெயரைக் கொண்ட சபைத் தலைவர்களாக அறியப்பட்ட நான்கு மனிதர்கள் இவர்கள் ஆவார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## அப்போஸ்தலர்களின் ஒப்புதல்

இரண்டாவதாக, இந்த புத்தகங்களுக்கு அப்போஸ்தல அங்கீகாரம் இருந்ததால், ஆரம்பகால கிறிஸ்தவர்களுக்கு இந்த சுவிசேஷங்கள் தேவனால் வழங்கப்பட்டவை தான் என்ற நம்பிக்கை இருந்தது.

அப்போஸ்தலர்களாகிய மத்தேயு மற்றும் யோவான், இயேசுவின் வார்த்தைகளையும் செயல்களையும் நேரில் கண்ட சாட்சிகள் ஆவார்கள். 1 பேதுரு 5:13 இல் மாற்கு ”என் மகன்” என்று அன்பாகப் பேசிய பேதுருவிடமிருந்து மாற்கு தனது பெரும்பாலான விஷயங்களைப் பெற்றதாகக் கருதப்பட்டது. நாம் ஏற்கனவே பார்த்தபடி, லூக்கா 1:1-4 இல், லூக்கா தனது படைப்பை நேரில் கண்ட சாட்சிகளின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டதாக விளக்கினார்.

மேலும், எசூபியஸ் தனது சபை வரலாற்றில், அப்போஸ்தலரான யோவான் தனது சொந்த சுவிசேஷத்தை எழுதுவதற்கு முன் மற்ற மூன்று சுவிசேஷங்களையும் தனிப்பட்ட முறையில் அங்கீகரித்ததாக அறிவித்தார். அப்போஸ்தலனாகிய யோவானைப் பற்றி எசூபியஸ் அவருடைய படைப்பின் புத்தகம் 3, அத்தியாயம் 24, 7வது பிரிவில் எழுதியதைக் கவனியுங்கள்:

> மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகிய மூன்று சுவிசேஷங்களும் ஏற்கனவே அனைவரின் கைகளிலும் மற்றும் யோவானுடைய சொந்த கைகளிலும் கிடைத்ததால், அவர் அவற்றை ஏற்றுக்கொண்டார் மற்றும் அவைகளின் உண்மைத்தன்மைக்கு சாட்சியமளித்தார்.

## சபையின் சாட்சி

மூன்றாவதாக, நான்கு சுவிசேஷங்களும் முதல் நூற்றாண்டில் சபையின் சாட்சிகளால் ஆதரிக்கப்பட்டன. நான்கு புத்தகங்களும் போதுமான பழமையானவை, ஆகையால் இயேசுவின் வாழ்க்கையையும் ஊழியத்தையும் நேரில் கண்ட சாட்சிகளால் அவைகளின் தகவல்களை நிராகரிக்கவோ அல்லது உறுதிப்படுத்தவோ முடியும். அது நடந்தது போல, நேரில் கண்ட சாட்சிகள் மிக ஆரம்ப காலத்தில் சபைகளில் சுவிசேஷங்களைப் பெற்று அவற்றை உறுதிப்படுத்தினர்.

> தேவன் தம்முடைய வார்த்தையில் தம்முடைய சொந்தக் குரலுக்குச் சாட்சி கொடுக்கிறார். ஆனால் நமது உதவிக்காக, வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளை நாம் பார்க்கலாம், மேலும் அவை மற்ற ஆதாரங்களில் இருந்து வரலாற்றைப் பற்றி நாம் அறிந்தவற்றுடன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தொடர்புபடுத்துவதைக் காணலாம். ஒரு பொதுவான தளத்தில், சமூக நிலைமைகள், அரசியல் நிலைமைகள், புவியியல் மற்றும் சுவிசேஷங்கள் எழுதப்பட்ட முதல் நூற்றாண்டு பாலஸ்தீனம் உட்பட வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற அனைத்து வகையான பொதுவான விஷயங்கள் எழுதப்பட்ட வரலாற்றுக் காலத்தைப் பற்றி நாம் அறிந்தவற்றுடன் ஒத்துப்போகின்றன என்பதை நாம் காண முடியும். இருப்பினும், வேதாகமத்தில் உள்ள குறிப்பிட்ட வரலாற்று விஷயங்களையும், அவை விவரிக்கும் வரலாற்று நிலைமைகள் மற்றும் சூழ்நிலைகளையும் நாம் பார்க்கும்போது, அவை வந்ததாகச் சொல்லப்படும் காலத்திலிருந்து வந்தவை என்பதையும், ஆவியின் சாட்சியத்துடன் அவை தேவனுடைய வார்த்தை என்று நமக்கு நம்பிக்கை வருகிறது என்பதையும் அறிந்துகொள்வதற்கான நியாயமான அடிப்படையை இது வழங்குகிறது. எனவே, ஆரம்பகால சபையின் முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில், நாமறிந்த இந்த நான்கு சுவிசேஷங்கள், உலகளவில் அப்போஸ்தலரிடமிருந்து அல்லது அப்போஸ்தல ஆதாரங்களில் இருந்து பெறப்பட்டன என்று உலக அளவில் அங்கீகரிக்கப்பட்டன. மேலும் அவை இயேசு என்ன செய்தார் என்பதற்கும் அவர் யார் மற்றும் என்ன போதித்தார் என்பதற்குமான உண்மையுள்ள மற்றும் நம்பகமான சாட்சிகளாக கருதப்பட்டன.

– Rev. மைக்கேல் ஜே. குளோடோ

சுவிசேஷங்கள் நம்பகமானவை, ஆவியானவரால் அருளப்பட்டவை மற்றும் உண்மைகளைக் கொண்டவை என்று நம்புவதற்கு நிறைய காரணங்கள் உள்ளன. ஆனால் நான் சொல்லக்கூடிய மிக முக்கியமான விஷயம் இதுதான்: நேரில் கண்ட சாட்சிகள் தங்கள் சாட்சியத்தை தங்கள் வாழ்க்கையுடன் முத்திரையிட்டனர். அவர்களில் ஒருவர் கசையடி வாங்குவதற்கும், அடிக்கப்படுவதற்கும், சிறையில் தள்ளப்படுவதற்கும், சிலுவையில் அறையப்படுவதற்கும் முன், ”உங்களுக்குத் தெரியும், இது உண்மையில் ஒரு கதை” என்று கூறியிருப்பார் என்று நீங்கள் நினைக்கலாம். அவர்கள் சொன்னதற்காக அவர்கள் தங்கள் உயிரை இழந்தார்கள்.

> இப்போது, மக்கள் மரிக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம்... மக்கள் அடிக்கடி பொய்களுக்காக மரிக்கிறார்கள். பொய்களுக்காக மரிக்கும் அனைத்து மக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு அவை பொய்கள் என்று தெரியாது. தங்கள் வாழ்நாளில் அபரிமிதமான அதிகாரத்தையோ செல்வத்தையோ கௌரவத்தையோ பெற்றால், பொய் என்று தெரிந்த ஒரு பொய்க்காக ஒரு சிறிய எண்ணிக்கையிலான மக்கள் மரித்துவிடுவார்கள். அவர்களுக்கு அது எதுவும் கிடைக்கவில்லை. அவர்கள் இந்த உலகில் யாரும் இல்லை, அவர்கள் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தனர், அவர்கள் வறுமையில் இருந்தனர், அவர்கள் தியாகம் செய்தார்கள், அவர்கள் அடிக்கப்பட்டார்கள், பின்னர் அவர்கள் மரித்தார்கள். மேலும் அவர்களில் ஒருவர் கூட தங்கள் சாட்சியத்தைத் திரும்பப் பெறவில்லை. எனவே, அது நடந்தது என்பதை நாம் உறுதியாக நம்பலாம்.
>
> – Dr. டான் டோரியனி

# ஒற்றுமை

இப்போது நாம் சுவிசேஷங்களின் இலக்கியத் தன்மையை ஆராய்ந்து, சபையில் அவற்றின் இடத்தைப் பார்த்தோம், நான்கு புதிய ஏற்பாட்டு சுவிசேஷங்களுக்கு இடையிலான ஒற்றுமையைப் பார்க்க நாம் தயாராக இருக்கிறோம்.

ஒவ்வொரு புத்தகமும் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய ஒரே கதையைச் சொல்கிறது என்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் சுவிசேஷங்களுக்கிடையேயான ஒற்றுமையை முதலில் கருத்தில் கொள்வோம், இரண்டாவதாக, தேவனுடைய ராஜ்யத்தைக் கொண்டுவருபவர் இயேசு என்பதை வலியுறுத்துவதன் மூலம் சுவிசேஷங்களுக்கிடையேயான ஒற்றுமையைப் பார்ப்போம். புதிய ஏற்பாட்டு சுவிசேஷங்கள் ஒவ்வொன்றிலும் அதே மாதிரியான கதை தொடர்புபடுத்தப்படுகிறது என்ற உறுதிப்பாட்டுடன் ஆரம்பிக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## அதே கதை

ஒரு பொது அர்த்தத்தில், மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் புத்தகங்களில் சொல்லப்பட்ட கதையை சுவிசேஷம் என்று சொல்லலாம். உண்மையில், அதனால்தான் புத்தகங்கள் "சுவிசேஷங்கள்" என்று குறிப்பிடப்படுகின்றன. அவை சுவிசேஷ கதையைக் கூறும் நூல்கள். ஆனால் சுவிசேஷ கதை என்பதன் சரியான அர்த்தம் என்ன?

"சுவிசேஷம்" என்ற வார்த்தை கிரேக்க வார்த்தையான (*εαγγέλιον)* எவாங்கலியோனிலிருந்து வருகிறது, இது "நற்செய்தி" என்று பொருள்படும். எனவே, வேதாகமம் இயேசுவின் சுவிசேஷத்தைப் பற்றி பேசும்போது, அது இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் குறிக்கிறது. இந்த நல்ல செய்தியின் அர்த்தம் என்ன? இயேசு யார்? அவரைப் பற்றி சுவிசேஷங்கள் என்ன கதை சொல்கின்றன?

இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க, "சுவிசேஷம்" என்ற வார்த்தை சில சமயங்களில் பண்டைய உலகில் ஒரு குறிப்பிட்ட வகை செய்தியைக் குறித்தது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக, போர்வீரராகிய ராஜாக்கள் அல்லது பேரரசர்கள் புதிய பிரதேசங்களை கைப்பற்றியபோது, அவர்கள் சில சமயங்களில் "நல்ல செய்தி" என்று அழைக்கப்படும் அறிவிப்புகளில் தங்கள் வெற்றிகளின் ஏகாதிபத்திய அறிவிப்புகளை வெளியிட்டனர். "சுவிசேஷம்" என்ற வார்த்தையின் இந்த பயன்பாட்டில், "நற்செய்தி" என்பது ஒரு ராஜாவின் வெற்றியைப் பற்றிய அறிவிப்பாகவும், அவருடைய ஆட்சியானது அவருடைய மக்களுக்கு ஆசீர்வாதங்களைக் கொண்டுவருவதாகவும் இருந்தது. உண்மையில், பழைய ஏற்பாட்டில் இந்த வார்த்தை சில நேரங்களில் இப்படித்தான் பயன்படுத்தப்பட்டது. உதாரணமாக, ஏசாயா 52:7 இன் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: "உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறார்!" என்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன (ஏசாயா 52:7).

இந்த வேத பகுதியில், இஸ்ரவேலின் சிறையிருப்பின் காலம் முடிந்துவிட்டது என்ற நற்செய்தியை அறிவித்து, எருசலேமைச் சுற்றியுள்ள மலைகளில் தூதர்களின் அற்புதமான அணுகுமுறையை ஏசாயா கற்பனை செய்தார். எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுடைய ஆட்சியின் காரணமாக அவர்கள் அமைதியையும் இரட்சிப்பையும் பெறுவார்கள் என்பதை அறிவித்தனர்.

ஏசாயா தீர்க்கதரிசனத்தின் சூழலில், தேவனுடைய ஆட்சி – அதாவது பூமியில் அவருடைய ராஜ்யத்தைக் கட்டுவது என்பது இஸ்ரவேல் மற்றும் யூதா மக்கள் கேட்க வேண்டிய நற்செய்தியாகும். தேவனுடைய அரசாட்சியின் கீழ், அவர்கள் தங்கள் எதிரிகளிடமிருந்து ஒய்வு பெற்று, தேவனின் உலகளாவிய ராஜ்யத்தில் என்றென்றும் வாழ்வார்கள் என்பது தான் செய்தியாகும்.

ஆனால் ஏசாயாவின் நாளில், தேவன் இதை இன்னும் செய்யவில்லை. ஏசாயாவின் தீர்க்கதரிசனம் எதிர்காலத்தில் தேவன் முழு பூமியின் மீதும் ராஜாவாக அதிகாரத்தில் வரப்போகும் ஒரு நாளை எதிர்நோக்கியிருந்தது. இந்த நாள் இறுதியாக இயேசுவில் உணரப்பட்டது என்பது தான் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் சொன்ன நற்செய்தியாகும். சுவிசேஷ எழுத்தாளர்கள் அனைவரும் ஒரே கதையைச் சொன்னார்கள், தேவனுடைய ராஜ்யத்தைக் கொண்டு வந்தவர் என்றும், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றியவர் என்றும் இயேசுவை மீண்டும் சுட்டிக்காட்டினர். அவர்கள் அழகான பாதங்களைக் கொண்ட தூதர்கள், தேவனுடைய ராஜ்யம் அதன் இறுதி ராஜாவாகிய இயேசு மூலம், பூமிக்கு வந்துவிட்டது என்ற நற்செய்தியை அறிவித்தனர். ராஜ்யத்தினுடைய வருகையைக் குறித்த இந்த ஒரு கதை நான்கு சுவிசேஷங்களும் பகிர்ந்து கொள்ளும் மேலான ஒற்றுமையை வழங்குகிறது.

இந்த உண்மையின் வெளிச்சத்தில், புதிய ஏற்பாட்டு சுவிசேஷங்கள் ”சுவிசேஷம்” மற்றும் ”சுவிசேஷம் அறிவி” போன்ற சொற்களை தேவனுடைய ராஜ்யத்தைக் குறிக்கும் மொழியைக் காட்டிலும் மிகக் குறைவாகவே பயன்படுத்துகின்றன என்பதை அறிந்துகொள்வதில் ஆச்சரியமில்லை. ”சுவிசேஷம்” என்ற வார்த்தையின் பல்வேறு வடிவங்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் முழுவதும் 23 வசனங்களில் மட்டுமே காணப்படுகின்றன. இதற்கு நேர்மாறாக, ”ராஜா”, ”தேவனுடைய ராஜ்யம்” மற்றும் மத்தேயுவின் ”பரலோக ராஜ்யம்” போன்ற சொற்றொடர்கள் சுமார் 150 முறை பயன்படுத்தப்படுகின்றன.

எல்லா சுவிசேஷங்களும் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய ஒரே கதையைச் சொல்கின்றன என்பதை இப்போது நாம் புரிந்துகொள்கிறோம், தேவனுடைய ராஜ்யத்தைக் கொண்டுவரும் ராஜாவாக இயேசுவை அவைகள் வலியுறுத்துவதைப் பார்ப்போம்.

## இயேசு

இயேசுவையும் ராஜ்யத்தையும் பற்றிய நமது விவாதம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலாவதாக, இயேசு ராஜ்யத்தைக் கொண்டுவந்தார் என்பதை நிரூபிக்க சுவிசேஷங்கள் வழங்கும் சில ஆதாரங்களைக் கருத்தில் கொள்வோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இரண்டாவதாக, இயேசுவையும் ராஜ்யத்தையும் பற்றி பேச வேதாகமம் பயன்படுத்தும் வார்த்தைகளை விவரிப்போம். மூன்றாவதாக, இயேசு ராஜ்யத்தை பல நிலைகளில் கொண்டு வருவதைப் பார்ப்போம். இயேசு ராஜ்யத்தைக் கொண்டுவந்தார் என்பதற்கான சில ஆதாரங்களுடன் ஆரம்பிக்கலாம்.

## சான்றுகள்

இயேசுவில் தேவனுடைய ராஜ்யம் வருவதை சுவிசேஷங்கள் பல வழிகளில் வலியுறுத்துகின்றன. ஆனால் இந்த பாடத்தில் நம் நோக்கங்களுக்காக, நாம் மூன்றில் மட்டுமே கவனம் செலுத்துவோம். நாம் குறிப்பிடும் தேவனுடைய ராஜ்யத்தின் முதல் சான்று பிசாசுகள் மீது இயேசுவுக்கு இருந்த வல்லமையாகும். மத்தேயு 12:28 இல் இயேசு சொன்னதைக் கவனியுங்கள்.

> நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே (மத்தேயு 12:28).

இந்த வேத பகுதியில், இயேசு ஒரு பிசாசை துரத்தினார். பிசாசுகளைத் துரத்துவதற்கான அவருடைய வல்லமை, அவர் தேவனுடைய ராஜ்யத்தைக் கொண்டுவந்தார் என்பதை நிரூபித்தது.

இயேசு தம் வல்லமையின் மூலம் நோயுற்றவர்களைக் குணப்படுத்தவும் மரித்தவர்களை உயிரோடு எழுப்பவும் செய்தார் என்பது தேவனுடைய ராஜ்யம் வந்துவிட்டது என்பதை சுவிசேஷங்கள் நிரூபிக்கும் இரண்டாவது வழியாகும்.

இயேசுவின் குணப்படுத்தும் வல்லமையும் அவர் தம் சீஷர்களுக்குக் கொடுத்த அதே வல்லமையும் அவர் தேவனுடைய ராஜ்யத்தைக் கொண்டுவந்தார் என்பதற்கு சான்றாகும் என்று சுவிசேஷங்கள் தொடர்ந்து கூறுகின்றன. இந்த கருப்பொருளை மத்தேயு 4:23-24, 8:5-13, மற்றும் 10:7-8 இல் பார்க்கிறோம். லூக்கா 9:1-11, மற்றும் 10:9 மற்றும் பல இடங்களில் இதைப் பார்க்கிறோம். பாவங்களை மன்னிக்கும் இயேசுவின் அதிகாரமும் ராஜ்யத்தின் வருகைக்கு அடையாளமாக காணப்பட்டது.

ஏசாயா 33:22-24 இல் வரவிருக்கும் மேசியாவைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசனம் சொல்வதைக் கவனியுங்கள்:

> கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை இரட்சிப்பார்.... வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சொல்வதில்லை; அதில் வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும் (ஏசாயா 33:22-24).

குணப்படுத்துவதும் மன்னிப்பதும் தேவனின் ராஜ அதிகாரம் என்று ஏசாயா சுட்டிக்காட்டினார். மேசியா பூமியில் தேவனுடைய ராஜ்யத்தை மீட்டெடுக்கும் போது, குணப்படுத்துதலும் மன்னிப்பும் இறுதியில் மேசியா மூலம் வரும் என்று அவர் தீர்க்கதரிசனம் கூறினார்.

இதைத்தான் முக்கியமாக இயேசு செய்தார். தேவனுடைய ராஜ்யத்தில் நுழைய மக்களை அழைத்தார். அவர் அவர்களுக்கு மரணத்திற்கு பதிலாக ஜீவனை வழங்கினார். அது இரட்சிப்பின் செய்தியாக இருந்தது, பாவத்திலிருந்து விடுபடுவதற்கான செய்தியாகவும் இருந்தது. மாற்கு 2:9-11 இல் இயேசுவின் விவாதத்தைக் கவனியுங்கள்:

> "'உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது' என்று சொல்வதோ, 'எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று' சொல்வதோ, எது எளிது? பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டு" என்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: "நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ" என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார் (மாற்கு 2:9-11).

தன்னில் ராஜ்யத்தைக் கொண்டிருந்த இயேசு பாவத்தை மன்னிக்க பூமியில் தனக்கு அதிகாரம் இருப்பதாக அறிவித்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார்.

இயேசுவில், தேவனுடைய ஆட்சி வந்தது. தேவனின் ஆட்சி, அதாவது தேவனுடைய *ராஜ்யம்,* இங்கே பூமியில் இருந்தது. அது தேவனுடைய மக்களுக்கு ஆசீர்வாதங்களைக் கொண்டுவருவதைக் குறித்தது. பல வருடங்களுக்கு முன்பு ஏசாயா தீர்க்கதரிசனம் கூறிய தேவனுடைய சமாதானம் இறுதியாக வந்தது என்பது இதன் அர்த்தமாகும்.

இந்த ஆதாரங்களை மனதில் வைத்துக்கொண்டு, இயேசுவையும் ராஜ்யத்தையும் பற்றி பேசுவதற்கு சுவிசேஷங்கள் பயன்படுத்தும் வார்த்தைகளைப் பற்றி பேசலாம்.

## சொல்லகராதி

சுவிசேஷ எழுத்தாளர்கள் அதைப் பற்றி பேசுவதற்கு பலவிதமான வார்த்தைகளைப் பயன்படுத்தின காரணத்தால் தான், கிறிஸ்தவர்கள் சில சமயங்களில் தேவனுடைய ராஜ்யத்தின் மீதான சுவிசேஷங்களின்

முக்கியத்துவத்தை உடனடியாகப் பார்க்கிறதில்லை. அவர்கள் ”ராஜா” மற்றும் ”ராஜ்யம்” போன்ற வார்த்தைகளை பயன்படுத்தினர். ஆனால் அவர்கள் “ஆட்சி,” “அதிகாரம்,” “சிங்காசனம்,” “தாவீதின் குமாரன்,” போன்ற வார்த்தைகளையும் தேவனின் சர்வாதிகாரத்துவத்தையும் கட்டுப்பாட்டையும் சுட்டிக்காட்டும் பல வார்த்தைகளையும் பயன்படுத்தினார்கள்.

> புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி பேசுவதற்கு பல்வேறு வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றனர், மேலும் வெளிப்படையான வார்த்தைகளை மட்டுமல்ல, அவர்கள் தொடர்புடைய கருத்துக்களையும் பயன்படுத்துகின்றனர். எனவே, உதாரணமாக, கிறிஸ்டோஸ் என்கிற வார்த்தை இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட பட்டத்தைக் குறிக்கிறது, அதாவது ”மேசியா,” ”அபிஷேகம் செய்யப்பட்டவர்” என்று இதற்கு அர்த்தம், இது ராஜாவான தாவீதின் குமாரனைப் பற்றி பழைய ஏற்பாட்டு மொழியில் பேசுகிறது. அல்லது குரியோஸ் அல்லது கர்த்தர் போன்ற ஒரு வார்த்தையில், இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட மற்றொரு பட்டத்தை நாம் பார்க்கலாம், அது அவரை ராயனைப் போன்ற ஒரு ராஜா என்று மீண்டும் பேசுகிறது. ராயனுக்கும் அந்தப் பட்டம் இருந்தது. எனவே, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களின் சூழல் மற்றும் காலத்திற்குள், ”கர்த்தர்” போன்ற ஒரு வார்த்தையில் உள்ள அதிகாரத்தை மக்கள் புரிந்துகொள்வார்கள். நிச்சயமாக, நம்மிடம் உள்ள மிக முக்கியமான சொற்றொடர் ”தேவனுடைய ராஜ்யம்” அல்லது மத்தேயுவின் விஷயத்தில், குறிப்பாக ”பரலோக ராஜ்யம்” என்ற சொற்றொடர் ஆகும். அதனால் அந்த சொற்றொடர் இரண்டு வழிகளில் பேசும். மக்கள் மீதான கிறிஸ்துவின் ஆட்சியின் ஒரு குறிப்பிட்ட ராஜ்யத்தைப் பற்றி ஒன்று பேசுகிறது, ஆனால், இது ஒரு வாய்மொழி யோசனை தான், ஒரு வகையான தேவனின் ஆட்சி எனவும் தேவன் தனது மக்களை ஆளும் அதிகாரம் எனவும் இதைச் சொல்லலாம். எனவே, தொடர்புடைய கருத்துக்கள், உதாரணமாக கீழ்ப்படிதல் போன்ற கருத்து, தேவனுடைய ராஜ்யத்தை வெளிப்படையாக குறிக்கவில்லை, ஆனால் அது நிச்சயமாக ராஜாவின் அதிகாரம், அவருக்கு கீழ்ப்படிதல் மற்றும் இயேசுவுக்கு நாம் செய்யும் ஆராதனையை மறைமுகமாக குறிப்பிடுகிறது.

– Dr. கிரிகோரி ஆர். பெர்ரி

ஒரு உதாரணமாக, மாற்கு 2:1-12 இல் உள்ள திமிர்வாதத்தால் பாதிக்கப்பட்ட மனிதனை இயேசு குணப்படுத்திய கதையில் ”ராஜா” அல்லது ”ராஜ்யம்” என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படவில்லை. எப்படியிருந்தாலும், “மனுஷகுமாரனுக்கு பூமியில் பாவங்களை மன்னிக்க அதிகாரம் உண்டு” என்று இயேசு கூறும்போது, வசனம் 10, முழு கதையின் ராஜ்ய அர்த்தத்தையும் பார்க்க நம்மை கட்டாயப்படுத்துகிறது. இயேசுவின் வல்லமையான குணப்படுத்துதல் மற்றும் மன்னிப்பு வார்த்தைகளில் தேவனுடைய ராஜ்யம் பூமிக்கு வந்தது. உண்மையில், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின் பின்னணியில், தேவனுடைய ராஜ்யத்தின் மகிமையான, ஆசீர்வதிக்கப்பட்ட தன்மையை விவரிக்கும்போது, இயேசு செய்த ஒவ்வொரு நல்ல காரியமும் ஏதோ ஒரு வகையில் தேவனுடைய ராஜ்யத்தின் சுவையாக இருந்தது.

> தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த பழைய ஏற்பாட்டு எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கையிலிருந்து,குறிப்பாக ஏசாயா புத்தகத்திலிருந்து, தேவன் தனது ராஜ்யத்தை ஸ்தாபிக்கவும் ஆட்சி செய்யவும் வருவார் என்ற நம்பிக்கையானது, அனைத்தும் சரியாக மாறிப்போகும் மறுசீரமைப்பு காலத்தின் நம்பிக்கையாக இருந்தது. இயேசுவின் சுகமாக்குதல் ஊழியம் மற்றும் மக்களை மீட்டெடுத்தல், மரித்த குமாரர்களை எழுப்புதல் மற்றும் பெரும்பாடை நிறுத்துதல், உடைந்த கைகால்களை நேராக்குதல், குருட்டுக் கண்களைக் குணப்படுத்துதல் ஆகியவை இயேசுவின் ஊழியத்திலும், சுவிசேஷங்களிலும் வெற்றிகரமாக நடந்த நாம் காணும் ஒரு காரியம் ஆகும். இவை இயேசுவின் வல்லமை மற்றும் அதிகாரத்தை நிரூபிப்பதற்கான சான்றுகள் மட்டுமல்ல, அவை நிச்சயமாக, தேவனுடைய வல்லமையின் வெளிப்பாடுகள் மட்டுமல்ல, உண்மையில் அவை தேவனுடைய ஆட்சி, அவரது மறுசீரமைப்பு அரசாட்சி மற்றும் அவருடைய மறுசீரமைப்பு ராஜ்யம் வருகிறது மற்றும் இப்போது இயேசுவில் வந்துள்ளது என்பதற்கான நம்பிக்கையின் சாட்சியாகும். தேவனுடைய ராஜ்யம் செயல்படுவதை நாம் காணும் பல வழிகளில் இதுவும் ஒன்றாகும்.

– Dr. ஜோனதான் டி. பென்னிங்டன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இப்போது இயேசு தேவனுடைய ராஜ்யத்தைக் கொண்டு வந்தார் என்பதற்கான சில ஆதாரங்களைப் பார்த்தோம், மேலும் இயேசுவின் ராஜ்யத்தைப் பற்றி பேசுவதற்கு சுவிசேஷங்கள் பயன்படுத்தும் வார்த்தைகளை கருத்தில் கொண்டு, இயேசு ராஜ்யத்தை கொண்டு வரும் நிலைகளை சுருக்கமாக விவரிப்போம்.

## நிலைகள்

அவர் வழங்கிய ராஜ்யத்தின் தற்போதைய அனுபவம் முழு ராஜ்யம் அல்ல என்று இயேசு கற்பித்தார். ராஜ்யத்தின் மற்றொரு கட்டம் இன்னும் வரவில்லை. எதிர்காலத்தில் ஒரு கட்டத்தில், தேவனுடைய ராஜ்யம் அதன் முழுமையிலும் வரும். இந்த எதிர்கால நாளை லூக்கா 21:27-28 இல் இயேசு விவரித்தார்:

> அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள். இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள் (லூக்கா 21:27-28).

பல யூத இறையியலாளர்கள் பழைய ஏற்பாட்டை விளக்கி, மேசியா வந்ததும், அவர் பாவம் மற்றும் மரணம் இருந்த பழைய காலத்தை ஒரேயடியாக அகற்றிவிட்டு, தேவனுடைய ராஜ்யத்தின் புதிய யுகத்தை உருவாக்குவார் என்று கற்பித்தார்.

ஆனால் இயேசு ராஜ்யத்தை பல கட்டங்களில் கொண்டு வருவதாக குறிப்பிட்டார். அவர் தனது பூமிக்குரிய ஊழியத்தின் போது ராஜ்யத்தைத் தொடங்கினார். அவர் பரலோகத்திலிருந்து ஆட்சி செய்யும்போது அவருடைய ராஜ்யம் இப்போது தொடர்கிறது. எதிர்காலத்தில் அவர் திரும்பி வரும்போது அது நிறைவேறும் அல்லது முடிக்கப்படும்.

> கடைசி காலத்தை மையமாக வைத்து செயல்படுகிற யூத மதத்தில், யதார்த்தம் அனைத்தும் தற்போதைய தீய யுகம் மற்றும் வரவிருக்கும் யுகம் என்று இரண்டு காலகட்டங்களாக பிரிக்கப்பட்டது. வரவிருக்கும் யுகமாகிய இறுதிக்கால ராஜ்யத்தை தேவன் அறிமுகப்படுத்தியபோது, அது பேரழிவாகவும், திடீரெனவும், முற்றிலும் நிகழும் என்பது எதிர்பார்ப்பாக இருக்கிறது. நீங்கள் ராஜ்யத்திற்கு முந்தைய காலத்திலிருந்து ராஜ்யத்தின் காலத்திற்கு உடனடியாக நகர்கிறீர்கள். ஆனால் புதிய ஏற்பாட்டில், புதிய ஏற்பாட்டு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> காலக்கட்டத்தின் நீட்சி என்று நான் அழைத்தது இருக்கிறது. இதனால் ராஜ்யத்தின் யுகமானது, கடைசி காலத்தை மையமாகக் கொண்ட யூத மதத்தில் எதிர்பார்க்கப்பட்டது போல, இப்போது இரண்டு காலகட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை: நிகழ்காலம் அல்லது ”ஏற்கனவே” இருக்கிற பரலோக ராஜ்யம், மற்றும் ”வரவிருக்கிற” பரலோக ராஜ்யம்.
>
> – Dr. டேவிட் ஆர். பாவுர்

> நாம் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி பேசும்போது, அதைப் பற்றி அடிக்கடி ”வந்துவிட்டது” என்று பேசுகிறோம், ஆனால் உண்மையில், எதிர்காலத்தில் வரபோகும் ராஜ்யத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். உண்மையில், இயேசு இவ்வாறு ஜெபிக்க கற்றுக்கொடுத்தார்: “பரமண்டலத்தில் இருப்பது போல உம்முடைய ராஜ்யம் வருவதாக.” ராஜா வந்து விட்டதால், அவர் பூமியில் தனது ராஜ்யத்தைத் துவங்கி விட்டார் என்று நாம் உணர்கிறோம். ஆனால் அவருடைய வருகைக்காக காத்திருக்கிறோம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையானது, இயேசு முதலில் வந்தபோது செய்தவற்றின் முழுப் பலன்களையும் கொண்டு வருவதாக இருக்கும். அதன் தாக்கங்கள் இறுதியாக செயல்படும் நாளாகவும் அது இருக்கும். சுவிசேஷத்தை இந்த உலகத்திற்கு எடுத்துச் செல்லும்போது வரவிருக்கும் ராஜாவின் எதிர்காலத்தை அறிவிக்கும் வேலை ஒவ்வொரு விசுவாசிக்கும் இருக்கிறது. எனவே, கிறிஸ்து திரும்பி வரும் நாளுக்கு தயாராகுமாறு மக்களை அழைக்கிறோம். ஆனால், விசுவாசிகளாகிய நாம் இப்போது கிறிஸ்துவை நம்முடைய கர்த்தராகக் கொண்ட பாக்கியத்தை அனுபவித்து மகிழ்கிறோம், எனவே நாம் இப்போது அவருடைய ஆட்சியின் கீழ் வாழ்கிறோம், நமக்காக மட்டுமல்ல, முழு சிருஷ்டிப்பிற்காகவும் அதை முழுமையாக உணரும் நாளுக்காகக் காத்திருக்கிறோம்.
>
> – Rev. Dr. சைமன் வைபர்ட்

முதல் நூற்றாண்டில் பெரும்பாலான யூதர்கள் இயேசுவை விட்டு விலகியதில் ஆச்சரியமில்லை, ஏனென்றால் அவர் விவரித்த ராஜ்யம் அவர்கள் எதிர்பார்த்த மற்றும் விரும்பிய ராஜ்யத்தைப் போல் இல்லை. ரோமைத்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தூக்கியெறிந்து யூதர்களை ரோம அடக்குமுறையிலிருந்து விடுவிக்கும் ராஜாவையும் ராஜ்யத்தையும் எதிர்பார்த்தனர். லூக்கா 17:20-25 மற்றும் யோவான் 6:60-69 இல் நாம் பார்ப்பது போல், இயேசு அந்த வகையான ராஜாவாக இருப்பதில் ஆர்வம் காட்டாதபோது, பலர் தங்கள் முதுகுகளைத் திருப்பிக் கொண்டு இயேசுவை விட்டு விலகிச் சென்றனர்.

நிச்சயமாக, இந்த நிராகரிப்பு இறுதியில் இயேசுவின் மரணதண்டனைக்கு வழிவகுத்தது. இயேசுவின் சிலுவை மரணம், அவரது அரசாட்சிக்கு எதிரான பகைமையின் உச்சக்கட்டமாகவும், அவரது அரசாட்சி மற்றும் ராஜ்யத்தின் வெற்றியாகவும் ஒரே நேரத்தில் அமைந்தது என்பது சுவிசேஷங்களின் பெரிய முரணாக உள்ளது. அவரது உயிர்த்தெழுதல் மற்றும் பரம் ஏறுதல் என்பது பிதாவாகிய தேவனின் வலது பாரிசத்தில் உள்ள அவரது ராஜ சிங்காசனத்திற்கான பாதையாகும். லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:3 இல் அறிவித்தபடி, இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலுக்கும் பரமேறுதலுக்கும் இடைப்பட்ட நாற்பது நாட்களை தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி தம் சீஷர்களுக்குக் கற்பிக்கப் பயன்படுத்தினார்.

மத்தேயு 28:18 இல், இயேசு பரமேறுவதற்கு சற்று முன்பு இவ்வாறு கூறினார்:

> வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத்தேயு 28:18).

தேவனுடைய ராஜ்யம் என்பது சுவிசேஷத்தின் கருப்பொருளாகும், இது இயேசுவின் வாழ்க்கை நிகழ்வுகளை சுவிசேஷங்களுடன் இணைக்கிறது. தேவன் தம்முடைய ராஜ்யம் இயேசுவில் வந்துவிட்டது என்ற வாக்குத்தத்தத்தை நிறைவேற்றியிருக்கிறார் என்ற நற்செய்தியை சுவிசேஷங்கள் அறிவிக்கின்றன. இயேசுவின் வெற்றிகரமான வாழ்க்கை ஒரு நாள் அவர் தம்முடைய ராஜ்யத்தை நிறைவாக்கத் திரும்புவார் என்று உறுதியளிக்கிறது, அது அனைத்து ஆசீர்வாதங்களையும் முழுமையாக நமக்குக் கொண்டுவரும்.

## வகை

இதுவரை இந்தப் பாடத்தில், சுவிசேஷங்களை அவற்றின் இலக்கியத் தன்மையின் அடிப்படையில் ஆராய்ந்து, சபையில் அவற்றின் நிலையைப் பார்த்து, அவற்றின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டோம். இந்த கட்டத்தில், ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடும் பல்வேறு வகைகளைப் பற்றி பேச நாம் தயாராக உள்ளோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாம் பார்த்தபடி, நான்கு சுவிசேஷங்களும் தேவனுடைய ராஜ்யம் வருவதைப் பற்றிய ஒரே கதையை முன்வைக்கின்றன, ஆனால் ஒவ்வொன்றும் அதனதன் சொந்த பாணியில் இதைச் செய்கின்றன. இந்த வகையை இரண்டு முக்கிய வழிகளில் ஆராய்வோம். முதலில், சுவிசேஷங்களில் உள்ள தகவல்களை சமரசம் செய்வதில் உள்ள சில வெளிப்படையான சிரமங்களைப் பார்ப்போம். இரண்டாவதாக, ஒவ்வொரு சுவிசேஷமும் தனித்துவமாக வலியுறுத்துவதைப் பார்ப்போம். வெளிப்படையான சிரமங்களைக் குறித்து முதலில் பார்க்கலாம்.

## வெளிப்படையான சிரமங்கள்

நாம் சுவிசேஷங்களைப் வாசிக்கும்போது, அவை ஒன்றுக்கொன்று எவ்வளவு ஒத்திருக்கிறது என்பதுதான் நம் எண்ணமாக இருக்கும். எப்படியிருந்தாலும், சுவிசேஷத்திலுள்ள பதிவுகள் வெவ்வேறு விஷயங்களைக் கூறுவதாகத் தோன்றும் பல இடங்கள் உள்ளன. நிச்சயமாக, இந்த வேறுபாடுகளில் பெரும்பாலானவை மிகவும் சிறியவைதான், அவை தீவிரமான முரண்பாடுகள் என்று அழைக்கப்பட முடியாது. இருந்தாலும் அவைகளில் ஒரு சில வாசிப்பவர்களுக்கு கடினமாக இருக்கின்றன. அதனால்தான், மிகவும் குறிப்பிடத்தக்க சில வகையான வெளிப்படையான சிரமங்களைப் பார்ப்பது முக்கியம்.

### காலவரிசை

மிகவும் பொதுவான சில வேறுபாடுகள் காலவரிசையுடன் தொடர்புடையவை, அதாவது நிகழ்வுகள் எல்லா சுவிசேஷங்களிலும் விவரிக்கப்பட்டுள்ள வரிசையை இது குறிக்கிறது.

வாழ்க்கை வரலாற்றுக் கதைகளாக, ஒவ்வொரு சுவிசேஷமும் ஒரே அடிப்படை காலவரிசையைப் பின்பற்றுகின்றன. ஒவ்வொன்றும் இயேசுவின் பிறப்பிலிருந்து தொடங்குகிறது, பின்னர் அவரது மரணத்தைப் பற்றி பேசுகிறது, இறுதியாக அவரது உயிர்த்தெழுதலுக்கு செல்கிறது. ஆனால் அவைகள் பெரும்பாலும் இயேசுவின் வாழ்க்கையில் நடந்த மற்ற நிகழ்வுகளை வெவ்வேறு வரிசையில் பட்டியலிடுகின்றன. காரணம், சுவிசேஷங்கள் சில சமயங்களில் முதல் நூற்றாண்டில் மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது ஆனால் நமது நவீன எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யாத முன்னுரிமைகளின்படி நிகழ்வுகளை தொகுத்து கொடுக்கின்றன. கண்டிப்பாக காலவரிசைப்படி முன்னுரிமைகளைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, சுவிசேஷங்கள் சில சமயங்களில் கருப்பொருள் அல்லது புவியியலின் அடிப்படையில் அவற்றின் அத்தியாயங்களை

வரிசைப்படுத்துகின்றன. உதாரணமாக, மாற்கு தனது சொந்த ஊரில் இயேசு நிராகரிக்கப்பட்ட கதையை மாற்கு 6:1-6 இல் கூறினார். ஆனால் லூக்கா அதை லூக்கா 4:14-30 இல் உள்ள கதையில் வைத்தார், அதனால் இது இயேசுவின் பொது ஊழியத்தில் முதல் கதையாக இருந்தது. லூக்காவின் சுவிசேஷம் மாற்குவின் சுவிசேஷத்தை விட கதைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. மேலும் இது இயேசு நிராகரிக்கப்பட்டதன் கருப்பொருளை வலியுறுத்த நீளமான கதையைக் கொண்டுள்ளது.

சுவிசேஷ எழுத்தாளர்கள் இயேசுவின் போதனைகளிலும் செயல்களிலும் ராஜ்யத்தின் வருகையை தெளிவாகத் தெரிவிப்பதில் அக்கறை கொண்டிருந்தனர். ஆனால் அவருடைய ஊழியத்திற்கான துல்லியமான காலவரிசைப் பயணத் திட்டத்தைப் பாதுகாப்பதில் மிகவும் குறைவாகவே ஆர்வம் காட்டினார்கள்.

## புறக்கணிப்பு

இரண்டாவது வகை வேறுபாடு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சுவிசேஷங்களில் உள்ள காரியத்தைத் தவிர்த்து விடுவதாகும். உதாரணமாக, யோவான் தனது சுவிசேஷத்தில் கர்த்தருடைய இராப்போஜனம் தொடங்கப்பட்டதைப் பற்றி குறிப்பிடவில்லை. இது போன்ற புறக்கணிப்புகளை பல வழிகளில் விளக்கலாம். அவை வெவ்வேறு எழுத்தாளர்களின் வலியுறுத்தலின் விளைவாக இருக்கலாம். அல்லது முந்தைய சுவிசேஷ எழுத்தாளர்களின் புத்தகங்களில் தோன்றிய பகுதிகளை மீண்டும் எழுத வேண்டிய அவசியத்தை பிற்கால சுவிசேஷ எழுத்தாளர்கள் உணராததன் விளைவாகவும் அவை ஏற்படலாம். எதுவாக இருந்தாலும், புறக்கணிப்புகள் சுவிசேஷ எழுத்தாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகளை ஏற்படுத்துவதில்லை.

நீங்கள் பல நபர்களை உள்ளடக்கிய ஒரு உரையாடலைப் பற்றி சிந்தியுங்கள். பேசும் ஒவ்வொரு நபரும் மற்றவர்கள் ஏற்கனவே கூறிய அனைத்தையும் மீண்டும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு பதிலாக, ஒவ்வொரு நபரும் தனது சொந்த குறிப்பிட்ட முன்னோக்கைச் சேர்ப்பதில் கவனம் செலுத்துவார்கள், ஒருவேளை சில புதிய விவரங்களை மற்றும் வேறு முக்கியத்துவத்தை சேர்ப்பார்கள்.

வேதம் அவ்வப்போது இதை வெளிப்படையாகச் செய்கிறது. எடுத்துக்காட்டாக, 2 நாளாகமம் 9:29 இல், மற்ற எழுத்தாளர்களால் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட விவரங்களைத் தவிர்க்கிறேன் என்று நாளாகம ஆசிரியர் வெளிப்படையாகக் கூறினார். இது 2 நாளாகமத்தில் குறைந்தது மூன்று முறையும், 1 மற்றும் 2 இராஜாக்களின் புத்தகங்களில் அடிக்கடியும் நடக்கும். எனவே, ஒரு சுவிசேஷ

எழுத்தாளர் ஏற்கனவே குறிப்பிட்டிருந்த முக்கியமான விஷயங்களைத் தவிர்த்துவிட்டதைக் கண்டு ஆச்சரியப்படுவதற்கில்லை.

## வெவ்வேறு நிகழ்வுகள்

மூன்றாவது பொதுவான வகை வெளிப்படையான சிரமம், இயேசுவின் ஊழியத்தில் நிகழ்ந்த வெவ்வேறு நிகழ்வுகளுக்கு இடையே உள்ள ஒற்றுமைகளின் விளைவாகும். அதாவது, சில சமயங்களில் இரண்டு சுவிசேஷங்கள் ஒரே நிகழ்வை வெவ்வேறு வழிகளில் விவரிக்கின்றன, ஆனால் அவை உண்மையில் இரண்டு ஒத்த ஆனால் வெவ்வேறு நிகழ்வுகளை விவரிக்கலாம்.

இயேசு ஒரு பயணம் செய்யும் போதகராக இருந்தார் என்பதை நினைவில் கொள்வது அவசியம். அதாவது, அவர் இடம் விட்டு இடம் சென்றார். அவர் வெவ்வேறு இடங்களில் ஒரே மாதிரியான பல அற்புதங்களைச் செய்தார், அதாவது பார்வையற்றவர்கள் அல்லது முடமான பலரைக் குணப்படுத்தினார். நிச்சயமாக, இயேசு மீண்டும் மீண்டும் அதே கேள்விகளுக்கும் சவால்களுக்கும் பதிலளித்தார்.

இதைத் தவிர, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் இயேசுவுக்கு இதே போன்ற வழிகளில் பதிலளித்தனர். லூக்கா 7:36-50 மற்றும் மாற்கு 14:3-9 ஆகியவற்றில் இயேசு அபிஷேகம் செய்யப்பட்டதைக் கவனியுங்கள். லூக்காவில், இயேசு ஒரு பரிசேயனின் வீட்டில் இருக்கிறார், ஆனால் மாற்குவில், அவர் குஷ்டரோகியான சீமோனின் வீட்டில் இருக்கிறார். இவை இரண்டும் ஒரே நிகழ்வின் முரண்பட்ட அறிக்கைகள் அல்ல. மாறாக, அவை இரண்டு வெவ்வேறு நிகழ்வுகளின் அறிக்கைகள்.

## வெவ்வேறு பேச்சுகள்

நான்காவது வகை வெளிப்படையான சிரமம் என்பது ஒரே மாதிரியான உள்ளடக்கத்தைக் கொண்ட வெவ்வேறு பேச்சுகளால் ஏற்படும் குழப்பம் ஆகும்.

மத்தேயு 5:1–7:29 இல் உள்ள இயேசுவின் மலைப் பிரசங்கமும், லூக்கா 6:17-49 இல் உள்ள லூக்காவின் இதே போன்ற போதனைகளும் இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகும். மத்தேயு 5:1 இல், அது ஒரு மலைப்பகுதியில் நடந்ததாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் லூக்கா 6:17 இல், அது ஒரு சமமான இடத்தில் நடந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த சிக்கலை அணுக குறைந்தது மூன்று வழிகள் உள்ளன. முதலாவதாக, மத்தேயு மற்றும் லூக்கா இருவரும் ஒரே நேரத்தில் மற்றும் இடத்தில் கொடுக்கப்பட்ட ஒரே பிரசங்கத்தைப் பற்றி பேசியிருக்கலாம். கலிலேயா கடலின் தென்மேற்குப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பகுதி கரடுமுரடான மலைப்பகுதி அல்ல, மாறாக கடலில் இருந்து எழும்பிய மலைச்சரிவுகள் ஆகும். இந்த உயரமான பகுதியில் தட்டையான பல சிறிய பகுதிகள் உள்ளன, எனவே ஒரே நிலப்பகுதி மத்தேயுவில் மலைப்பகுதி என்றும் லூக்காவில் சமமான இடம் என்றும் அழைக்கப்பட முடியும். இரண்டாவதாக, இயேசு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பேசிய விஷயங்களை ஒரு பிரசங்கத்தில் ஒன்றாக இணைத்து, ஒரு கூட்டுப் பேச்சை உருவாக்கும் பண்டைய நடைமுறைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு ஆகும். இது பண்டைய வரலாற்றாசிரியர்களால் பயன்படுத்தப்பட்ட ஒரு நுட்பமாகும். மேலும் ஒற்றுமை அல்லது நம்பகத்தன்மை பற்றி எந்த கேள்வியையும் எழுப்பவில்லை. மூன்றாவது இடத்தில், இயேசு இரண்டு வெவ்வேறு நாட்களில், இரண்டு வெவ்வேறு அமைப்புகளில் ஒரே மாதிரியான இரண்டு பிரசங்கங்களை பிரசங்கித்திருக்க முடியும்: ஒன்று மலைப்பகுதியிலும் மற்றொன்று சமவெளியிலும் நிகழ்ந்திருக்கலாம். இயேசுவினுடைய ஊழியன் பாணியின் காரணமாக, இயேசு தம்முடைய போதனைகளில் பலவற்றை அவர்களுக்கு அறிமுகமில்லாத புதிய பார்வையாளர்களுக்குத் திரும்பத் திரும்பச் சொல்வார் என்று கருதுவது நிச்சயமாக நியாயமானது.

சுவிசேஷங்களில் உள்ள வேறுபாடுகளை ஒத்திசைக்கக்கூடிய பல்வேறு வழிகளைக் கவனிப்பதன் மூலம், இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியத்தைக் குறித்த அவைகளின் ஒன்றுபட்ட சாட்சி உண்மையானது என்பதை நாம் உறுதியாக நம்பலாம். ஆம், தகவல்களில் சில முரண்பாடுகள் இருப்பது போல் தோன்றலாம். ஆனால் இந்த வகையான வேறுபாடுகள் ஒவ்வொன்றிற்கும் நியாயமான விளக்கங்கள் உள்ளன. வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இயேசு ஒரே விஷயத்தைக் கற்பித்தார் என்பதை நாம் கண்டறிந்தால், அவருடைய ஊழியம் மற்றும் செய்தியின் நிலைத்தன்மையைக் காணலாம், மேலும் அவருடைய போதனைகளை நம் வாழ்வில் பயன்படுத்துவதற்கான பல்வேறு வழிகளையும் காணலாம்.

வேத பகுதிகளில் உள்ள வெளிப்படையான சிரமங்களை கேட்பதன் மூலம் நான்கு சுவிசேஷங்களில் உள்ள வகையைப் பார்க்க ஆரம்பித்தோம். எனவே, இந்த நேரத்தில், நான்கு சுவிசேஷங்களின் தனித்துவமான முக்கியத்துவங்களை ஆராய்வதன் மூலம் அவற்றின் வகையைத் தொடர்ந்து பார்க்க நாம் தயாராக இருக்கிறோம்.

## தனித்துவமான வலியுறுத்தல்கள்

ஒவ்வொரு சுவிசேஷமும் ஒரு தனித்துவமான எழுத்தாளரால் எழுதப்பட்டது, அந்த எழுத்தாளர்கள் இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியத்தைப் பற்றிய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தங்களது சொந்த கண்ணோட்டத்தை வழங்கினர், ஆகையால் நான்கு சுவிசேஷங்களுக்கு இடையே வேறுபாடுகள் உள்ளன. நான்கு சுவிசேஷங்களும் பரிசுத்த ஆவியானவரால் அருளப்பட்டவை என்பதை அறிந்திருக்கிறோம். ஆகையால் ஒவ்வொரு சுவிசேஷ கணக்கும் பிழையில்லாமலும் மற்றவற்றுடன் முரண்படாமலும் இருக்கிறது என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். ஆனால் வேறுபாடுகளே இல்லை என்று இதற்கு அர்த்தமில்லை. அந்த வேறுபாடுகளை வடிவமைக்க பரிசுத்த ஆவியானவர் எழுத்தாளர்களின் ஆளுமைகள், விருப்பங்கள் மற்றும் ஊழிய சூழ்நிலைகளைப் பயன்படுத்தினார். எனவே, பரிசுத்த ஆவியானவர் நம்மை ஆசீர்வதிக்க விரும்பும் எல்லா வழிகளிலும் நாம் ஆசீர்வதிக்கப்பட விரும்பினால், சுவிசேஷத்தின் தனித்துவமான அணுகுமுறைகளை நாம் படிக்கும்போது அவைகளை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

வாழ்க்கையின் பல சூழ்நிலைகளில், வெவ்வேறு நபர்கள் ஒரே உண்மையைப் பற்றி வெவ்வேறு வழிகளில் பேசுவதைக் காண்கிறோம். சிறு குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்த எவருக்கும் ஒரு நிகழ்வு பல, இணக்கமான விளக்கங்களைக் கொண்டிருக்கலாம் என்பது தெரியும். ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்கள் விளையாடிய விளையாட்டுகளில் அவரவருடைய சொந்த கண்ணோட்டம் உள்ளது. விளையாட்டைப் பற்றி அவர்கள் ஒவ்வொருவரும் பேசுவதைக் கேட்பதன் மூலம் மட்டுமே உண்மையில் என்ன நடந்தது என்பதை நாம் ஒன்றாக இணைக்க முடியும். பொம்மைகளின் வண்ணங்களைப் பற்றி ஒரு குழந்தை ஆர்வமாக இருக்கலாம். மற்றொரு குழந்தை அவைகள் உருவாக்கிய ஒலிகளை விவரிப்பதில் அதிக ஆர்வம் காட்டலாம். மற்றொரு குழந்தை உற்சாகமாக அங்குமிங்கும் ஓடுவதை தெரிவிக்கலாம். இந்த வெவ்வேறு கண்ணோட்டங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுவதில்லை. ஆனால் ஒவ்வொரு குழந்தையும் விளையாட்டின் சில பகுதிகளை மற்றவைகளை விட சுவாரஸ்யமாகக் கண்டதாக குறிப்பிடுகின்றனர்.

இதேபோல், ஒவ்வொரு சுவிசேஷ எழுத்தாளரின் சொந்த அக்கறைகளும் காரியங்களும் சுவிசேஷத்தில் பிரதிபலிக்கின்றன. இரண்டு சுவிசேஷ தகவல்களும் ஒரே மாதிரியாகத் தெரியவில்லை. அனைத்து புதிய ஏற்பாட்டு சுவிசேஷ கதைகளும் ஒரே இயேசுவை விவரிக்கின்றன, ஆனால் அவை பெரும்பாலும் அவரைப் பற்றி வெவ்வேறு வழிகளில் பேசுகின்றன மற்றும் அவருடைய ஊழியத்தின் பல்வேறு அம்சங்களை முன்னிலைப்படுத்துகின்றன.

> நம்மிடம் நான்கு சுவிசேஷங்கள் உள்ளன, ஆனால் ஒரு இயேசு மட்டுமே இருக்கிறார். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? முதலாவதாக, இயேசு ஒரு உருவப்படத்தின் கீழ்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> உள்ளடங்குவதற்கு மிகவும் கடினமான ஒரு வரலாற்று நபர் என்பதை அடையாளம் காண்பது என்பது ஆரம்பகால கிறிஸ்தவர்களின் புத்திசாலித்தனம் ஆகும். சுவிசேஷங்கள் உருவப்படங்கள் போன்றவை, எனவே நான்கு சுவிசேஷங்களிலும் இயேசுவை அடையாளம் காண முடியும், ஆனால் அதே நேரத்தில் அவைகள் வெவ்வேறு வழிகளில் இயேசுவைப் பற்றிய சம்பவங்களின் வெவ்வேறு கோணங்களை காட்டுகின்றன. நான் உங்களுக்கு ஒரு உதாரணம் தருகிறேன். யோவான் சுவிசேஷத்தில், உவமைகளும் பிசாசுகள் விரட்டப்படுவதும் இல்லை. மாற்கு சுவிசேஷத்தில், இயேசு உவமைகளால் வகைப்படுத்தப்படுகிறார், மேலும் மாற்கு சுவிசேஷத்தின் ஆரம்ப பகுதியில் அடிக்கடி நடக்கும் அற்புதம் பிசாசுகளை துரத்துதல் ஆகும். இவை வெவ்வேறு உருவப்படங்களாக இருந்தும் ஒரே இயேசுவை காட்டுகின்றன. மேலும், ஒவ்வொரு சுவிசேஷ எழுத்தாளரும் இயேசுவைப் பற்றி சற்று வித்தியாசமான பார்வையைக் கொண்டுள்ளனர். ஒருவர் அவர் கிறிஸ்து என்றும், மற்றொருவர் அவர் கிறிஸ்து இல்லை என்றும் நினைக்கிறார் என்ற அர்த்தத்தில் அல்ல, ஆனால் இயேசு யூத மேசியா என்றும் அதே சமயம் உலக இரட்சகர் என்றும் எப்படி வெளிப்படுத்துவது என்பது பற்றி அவர்கள் வெவ்வேறு வலியுறுத்தல்களைக் கொண்டுள்ளனர். இயேசுவின் ஊழியத்தின் வெவ்வேறு அம்சங்களையும் வெவ்வேறு பகுதிகளையும் வலியுறுத்துவதற்கும், கேள்வியை வடிவமைத்து பதில்களை வழங்குவதற்கும் வெவ்வேறு வழிகளை வலியுறுத்துவதற்கான சுதந்திரம் அவர்களுக்கு இருந்ததை உணர்ந்தனர்.
>
> – Dr. பென் விதரிங்டன் III

சுவிசேஷங்களில் பல தனித்துவமான பண்புகள் மற்றும் கருப்பொருள்கள் உள்ளன. ஆனால் இந்த அறிமுக பாடத்தில், ஒவ்வொரு சுவிசேஷமும் இரண்டு கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்தில் கவனம் செலுத்துவோம்: ”இயேசு யார் ?” மற்றும் ”நாம் எப்படி இயேசுவைப் பின்பற்றுகிறோம்?” இந்த முக்கியமான கேள்விகளுக்கு மத்தேயு எவ்வாறு பதிலளிக்கிறார் என்பதைப் பார்ப்பதன் மூலம் ஆரம்பிக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## மத்தேயு சுவிசேஷத்தில் இயேசு யார்?

மற்ற சுவிசேஷ எழுத்தாளர்களைவிட , பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்ட இஸ்ரவேலின் மேசியா ராஜா இயேசு என்று தெரிவிக்க மிகவும் அக்கறை கொண்டவர் மத்தேயு ஆவார்.

இயேசுவின் ராஜரிகத்தை மத்தேயு குறிப்பிடும் இடங்களின் சிறிய மாதிரி: 2:2 இல் "யூதர்களின் ராஜாவாகப் பிறந்தவரை" எங்கே காணலாம் என்று ஞானிகள் கேட்டார்கள்; 7:21-23 இல், கர்த்தராகிய இயேசு, தம்மை "கர்த்தர்" என்று அழைக்கும் அனைவரையும் பரலோக ராஜ்யத்தில் அனுமதிக்க மாட்டார் என்று கூறினார்; 20:20-28 இல் அப்போஸ்தலர்களான யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரின் தாய் தன் குமாரர்களுக்கு ராஜ்யத்தில் இயேசுவுக்கு இணையாக ஒரு சிறப்புரிமையை வழங்குமாறு கோரியபோது; 25:31-46 இல் இறுதி நாளில் ராஜாவாக தம்முடைய நியாயத்தீர்ப்பைப் பற்றி இயேசு ஒரு உவமையைச் சொன்னார்; மற்றும் 27:37 இல் ரோம வீரர்கள் இயேசுவின் தலைக்கு மேல் "இவர் யூதர்களின் ராஜா" என்று எழுதப்பட்ட ஒரு அடையாளத்தை சிலுவையில் வைத்ததாக மத்தேயு வஞ்சப்புகழ்ச்சியாகக் குறிப்பிட்டார்.

தேவனுடைய மேசியா ராஜா பூமிக்கு தேவனின் மேசியா ராஜ்யத்தை கொண்டு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவர் இஸ்ரவேலை சிறைப்பிடித்தவர்களிடமிருந்தும் அதன் எதிரிகளிடமிருந்தும் விடுவிப்பார். அவர் நீதியுடன் ஆட்சி செய்வார், அமைதியையும் செழிப்பையும் நிலைநாட்டுவார். இயேசு இதையெல்லாம் செய்தார், ஆனால் யூதர்கள் எதிர்பார்த்த விதத்தில் அவர் செய்யவில்லை. உதாரணமாக, மத்தேயு 5:17 இல் உள்ள இயேசுவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள். அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன் (மத்தேயு 5:17).

அவருடைய ஊழியத்தைப் பார்த்த பல யூதர்கள், அவர் தேவனுடைய பிரமாணத்தை அழிப்பதாகவும், பழைய ஏற்பாட்டின் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றத் தவறியதாகவும் நினைப்பார்கள் என்பதை இயேசு புரிந்துகொண்டார். அதனால்தான் அவர் நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனத்தையும் நிறைவேற்றுகிறேன் என்று அழுத்தமான தெளிவுடன் கூறினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த வேத பகுதியில் மட்டுமல்ல, அடிக்கடி, பழைய ஏற்பாட்டு வேதாகமத்தின் ஏதாவது ஒரு அம்சத்தை இயேசு நிறைவேற்றியதாக மத்தேயு அறிவித்தார், அவர் உண்மையிலேயே இஸ்ரவேலின் மேசியா ராஜா என்பதை நிரூபித்தார்.

எனவே, மத்தேயுவின் கூற்றுப்படி, நாம் எப்படி இயேசுவைப் பின்பற்றுகிறோம்? இயேசு தேவனின் பிரமாணத்தை முழுமையாகக் கடைப்பிடித்தார், ஆனால் அவர் செய்தது அதுமட்டுமல்ல. நியாயப்பிரமாணத்தின் வெளிப்புற கோரிக்கைகளை மட்டும் கடைப்பிடிப்பது போதாது என்று அவர் கூறினார். தேவன் எப்பொழுதும் தம்முடைய ராஜ்யத்தின் குடிமக்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். ராஜ்யம் வந்துவிட்டது, அது தேவனுடைய மக்களுக்கு மன்னிப்பையும் இரட்சிப்பையும் கொண்டுவந்து, புதிய, கீழ்ப்படிதலுள்ள இருதயங்களை நமக்குத் தருகிறது என்பதே சுவிசேஷத்தின் நற்செய்தியாகும். மேலும் நம்முடைய மாறிய இருதயங்கள், அன்பான, நன்றியுள்ள, மகிழ்ச்சியான கீழ்ப்படிதலுடன் இயேசுவைப் பின்பற்றுவதற்கான ஆற்றலையும் ஊக்கத்தையும் தருகின்றன.

> இருதயத்திலிருந்து தேவனுக்குக் கீழ்ப்படிவதைப் பற்றி நாம் பேசும்போது, இருதயம் உண்மையில் அனைத்தையும் உள்ளடக்கிய பதமாக இருக்கிறது. நான் என் மக்களுக்கு அதை தலையிலிருந்து தொடங்கி இருதயம் மற்றும் கை வரை இருக்கிறது என்று கற்றுக்கொடுக்கிறேன். நாம் அவருக்கு எப்படிக் கீழ்ப்படிய வேண்டும், எப்படி அவரை நேசிக்க வேண்டும் என்பதே அது. தலை என்பது கற்பனையின் இடமாக, மனதின் இடமாக இருக்கும், மேலும் நாம் தேவனை நம் முழு மனதுடன் நேசிக்க வேண்டும். நாம் நம் எல்லா பாசத்துடனும் தேவனை நேசிக்க வேண்டும். மேலும் நாம் நம் கைகளாலும் கால்களாலும் தேவனை நேசிக்க வேண்டும். எனவே, இருதயம் என்பது உங்கள் மார்பில் ஏதோ ஒன்று துடிக்கிறது என்று அர்த்தமல்ல. இது அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு பதமாகும். அப்படியானால், நாம் தேவனை வெளிப்புறமாக நேசிக்கிறோமா? ஆம், உண்மையில் நாம் நேசிக்கிறோம். ஆனால் நாம் தேவனை நேசிப்பது நமது பாசங்களாலும் தான். நாம் எல்லாவற்றிலும் தேவனை நேசிக்கிறோம், மேலும் ”இருதயம்” என்ற வார்த்தை எல்லாவற்றையும் என்பதை சரியாகச் சுட்டிக்காட்டுகிறது என்று நான் நம்புகிறேன்.
>
> – Dr. மேட் பிரைட்மேன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இப்போது மத்தேயுவின் சுவிசேஷம் நமது இரண்டு கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிக்கிறது என்பதைப் பார்த்தோம், மாற்கு என்ன சொல்கிறார் என்று ஆராய்வோம்.

## மாற்கு சுவிசேஷத்தில் இயேசு யார்?

முதலில், மாற்குவின் கூற்றுப்படி, இயேசு யார்? அவருடைய புத்தகம் முழுவதும், இயேசு தேவனுடைய ஜனங்களின் எதிரிகளை வென்ற தேவனின் துயரப்படுகிற குமாரன் என்று மாற்கு வலியுறுத்தினார். பொல்லாத ஆவிகளின் மீது இயேசுவிற்கு இருந்த வல்லமையைக் காட்டும் அற்புதங்களின் பல நிகழ்வுகளை மாற்கு பதிவு செய்துள்ளார். மத்தேயு மற்றும் லூக்காவின் சுவிசேஷங்களை விட மாற்கு மிக சிறிதானது என்றாலும், அது கிட்டத்தட்ட பதினெட்டு அற்புதங்களைப் பதிவு செய்கிறது.

மாற்கு சுவிசேஷத்தின் தொடக்கத்திலிருந்தே இயேசு தேவனுடைய வெற்றியும் துன்பமும் நிறைந்த குமாரனாக இருப்பதைக் காண்கிறோம். முதல் அதிகாரத்திலேயே, யோவான் ஸ்நானகன் இயேசுவின் வருகையை முன்னறிவித்தார், பின்னர் இயேசு தனது பொது ஊழியத்தைத் தொடங்கினார். அவர் ஞானஸ்நானம் பெற்றார், வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டார், அவரது முதல் சீஷர்களை அழைத்தார், பொல்லாத ஆவிகளை துரத்தினார், பல நோய்களிலிருந்து பலரைக் குணப்படுத்தினார். இந்த செயல்-நிரம்பிய, வேகமான கதையின் மேலோட்டமான வாசிப்பு கூட, தேவனுடைய ராஜ்யத்தின் எதிரிகளை இயேசு வல்லமையுடன் வென்றார் என்பதைக் காட்டுகிறது. அவருடைய ஊழியத்தின் தொடக்கத்திலிருந்தே, மாற்கு அவரை தேவனுடைய பாடுபட்ட குமாரனாக சித்தரிப்பதை இதை ஆழ்ந்து வாசிப்பதன் மூலம் அறிந்துகொள்ளலாம். உதாரணமாக, மாற்கு 1:12-13 இல், இயேசுவின் ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து இந்த காரியத்தைப் பற்றி படிக்கிறோம்:

> உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவினார். அவர் வனாந்தரத்திலே நாற்பதுநாள் இருந்து, சாத்தானால் சோதிக்கப்பட்டார். அங்கே காட்டுமிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக்கொண்டிருந்தார். தேவதூதர்கள் அவருக்கு ஊழியஞ்செய்தார்கள் (மாற்கு 1:12-13).

இயேசு தனது பொது ஊழியத்தின் முதல் கணத்திலிருந்தே சாத்தானின் தாக்குதலுக்கு ஆளானார். இயேசு துன்புறுத்தலையும் நிராகரிப்பையும் சகித்ததால், இயேசு துயரப்படும் ஊழியர் என்ற இந்த சித்திரம் மாற்குவின் சுவிசேஷம் முழுவதும் தொடர்ந்து வளர்ந்து வந்தது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்படியானால், துயரப்பட்டவரும் வெற்றிகொண்டவருமாகிய இயேசுவை நாம் பின்பற்ற வேண்டும் என்று மாற்கு எவ்வாறு கூறுகிறார்? ஒருபுறம், மாற்கு சுவிசேஷம் கிறிஸ்தவ வாழ்க்கையை எளிதான ஒன்றாக காட்டவில்லை. மாற்கு சீஷத்துவத்தை ஒரு கடினமான மற்றும் அடிக்கடி ஏமாற்றமளிக்கும் செயல்முறை என்று விவரித்தார், அதில் நாம் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல், தவறுகளையும் செய்கிறோம். உண்மையில், இயேசுவின் சீஷர்கள் அவரைப் புரிந்துகொள்ளவோ அல்லது இயேசுவில் விசுவாசம் வைக்கவோ தவறிவிட்டார்கள் என்பது மாற்கு சுவிசேஷத்தின் தனித்துவமான அம்சமாகும். மாற்கு 4:40 இல் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு விசுவாசம் இருக்கிறதா என்று ஆச்சரியப்பட்டார்; 6:52 இல், சீஷர்களின் "இருதயங்கள் கடினப்படுத்தப்பட்டன"; 7:18 இல், இயேசு தம்முடைய போதனைகளைப் புரிந்துகொள்ளத் தவறியதால், தம் சீஷர்கள் "மந்தமானவர்கள்" என்று குற்றம் சாட்டினார்; 9:18 இல் சீஷர்களால் ஒரு பொல்லாத ஆவியை விரட்ட முடியவில்லை; 9:38-41 இல் சீஷர்கள் பிசாசுகளை துரத்தும் ஒரு நபரை தங்களுக்குத் தெரியாததால் அவரைத் தடுக்க முயன்றனர்; மற்றும் அதிகாரம் 14 இன் போக்கில், ஒரு சீஷன் இயேசுவை அதிகாரிகளிடம் காட்டிக் கொடுத்தான், ஒருவன் இயேசுவுடன் எந்த தொடர்பும் இல்லையென்று மறுத்தான், மீதமுள்ளவர்கள் அவரை கைவிட்டனர்.

மாற்குவின் சுவிசேஷத்தில் உள்ள இந்த வலியுறுத்தல், இயேசுவைப் பின்பற்றுவது பற்றி குறைந்தபட்சம் இரண்டு விஷயங்களைக் கற்றுக்கொடுக்கிறது. முதலாவதாக, சீஷர்களைப் போலவே, நாம் எப்போதும் இயேசுவைப் புரிந்து கொள்ள மாட்டோம். உண்மையில், வேதாகமத்தில் உள்ள பல விஷயங்களை நாம் தவறாகப் புரிந்துகொண்டிருக்கலாம். எனவே, நாம் அனைவரும் கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ளும் அளவுக்கு தாழ்மையுடன் இருக்க வேண்டும். இதன் ஒரு பகுதியாக, வேதத்தின் போதனைகளை நாம் விசுவாசத்தின் மூலம் ஏற்றுக்கொள்ள வேண்டும், அது நமக்கு விசித்திரமாகவோ அல்லது தவறாகவோ தோன்றினாலும் தேவனுடைய வார்த்தை உண்மையானது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, கிறிஸ்தவர்களுக்கு கஷ்டங்களும் துன்பங்களும் தவிர்க்க முடியாதவை. அவரைப் பின்தொடர்வதிலிருந்து விலகிச் செல்ல பல ஆபத்துகள், பல சோதனைகள் உள்ளன.

மாற்கு 8:34-35 இல் இயேசு கூறியதைக் கவனியுங்கள்.

> ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும்

> சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான் (மாற்கு 8:34-35).

அவருக்கு நாம் செய்யும் அர்ப்பணிப்பில் நாம் உண்மையாக இருக்க வேண்டும் என்று இயேசு கற்பித்தார். இயேசு அனுபவித்தது போல் நாமும் பாடுபட தயாராக இருக்க வேண்டும், சோதனை மற்றும் ஆவிக்குரிய தாக்குதல்களை எதிர்த்து நிற்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும். ஆனால் இந்த வேத பகுதியில் இன்னொன்றையும் கவனியுங்கள்: இயேசு துயரப்படும் தேவனுடைய குமாரன் மட்டுமல்ல; அவர் தேவனின் வெற்றிகரமான குமாரனும் ஆவார். உண்மையில், அவர் தனது துயர மரணத்தின் மூலம் வெற்றி பெறுகிறார். ராஜ்யத்திற்காக துன்பப்படுவதில் நாம் அவரை உண்மையுடன் பின்பற்றினால், நித்திய ஜீவனைப் பெறுவோம்.

> பாடுகள் உண்மையில் முக்கியமானது என்ன என்பதில் நமது விழிப்புணர்வை மையப்படுத்த வைக்கின்றன, வலி மட்டுமே அதில் இல்லை என்பதை நம்மை உணர வைக்கின்றன. நான் இதை விட மேலானதற்காக வாழ்கிறேன், அதன் நடுவில் நான் இன்னும் தேவனை நம்புகிறேன், ஏனென்றால் எனது ஆறுதல், எனது பாதுகாப்பு மற்றும் எனது மகிழ்ச்சி மற்றும் நான் அக்கறை கொண்டவற்றையெல்லாம் விட கிறிஸ்துவில் எனக்கிருப்பது பெரியது என்பதை நான் அறிவேன்.
>
> – Dr. ஜான் இ. மெக்கின்லே

> இயேசு பாடுபடும் ஊழியராக வந்தார். கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் எவரும் குறிப்பிடத்தக்க பாடுகளை அனுபவிக்க தங்கள் வாழ்க்கையில் ஒரு இடத்தைப் பெற வேண்டும். துன்பங்கள் நிறைந்த இந்த உலகத்திற்கு நாம் வருவது இயேசு யார் என்பதன் ஒரு பகுதியாக இருக்கிறது. கிறிஸ்துவின் ஊழியத்தில் பங்கு கொள்ள வேண்டுமானால், நம் சொந்த வாழ்க்கையில் துன்பங்களுக்கு ஒரு இடம் இருக்க வேண்டும். நம் சொந்த பாடுகள் மட்டுமல்ல, மற்றவர்களின் பாடுகளிலும் நாம் பங்கெடுக்க வேண்டும், உண்மையில் துக்கப்படுபவர்களுடன் நாமும் துக்கப்பட வேண்டும், மேலும் அவர்களின் துன்பங்களை நம் வாழ்விலும் அழைக்க வேண்டும், அந்தச் சூழலில் பங்கெடுத்து ஊழியம் செய்ய வேண்டும். நாம் இந்த உலகத்தில் நுழையும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> போது பாடுகளை அனுபவிக்கப் போகிறோம் என்கிற புரிதல் இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், தேவனைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம் பாடுகள் வழியாக ஊழியம் செய்ய வேண்டும் என்பது தேவன் விரும்பும் முக்கிய வழிகளில் ஒன்றாகும். அப்போது நாம் தேவனின் இருதயத்தைப் புரிந்துகொள்ளத் தொடங்குகிறோம். பின்னர், தேவன் நம்மைச் செம்மைப்படுத்துகிறார். இந்த பாடு குணத்தை உருவாக்குகிறது, அது நம்பிக்கையை உருவாக்குகிறது, அது தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை உருவாக்குகிறது. அதனால், தேவன் நம் வாழ்வில், பாடுகளின் மூலம் நம்மை செம்மைப்படுத்தும் வழிகளில் செயல்படுவதைக் காண முடிகிறது.
>
> – Dr. கே. எரிக் தோனேஸ்

மத்தேயுவையும் மாற்குவையும் மனதில் வைத்துக்கொண்டு, இயேசுவையும் அவருடைய சீஷர்களையும் பற்றிய நமது கேள்விகளுக்கு லூக்கா எவ்வாறு பதிலளிக்கிறார் என்பதைச் சிந்திப்போம்.

## லூக்கா சுவிசேஷத்தில் இயேசு யார்?

"இயேசு யார்?" என்ற கேள்விக்கு அவர் உலகின் இரக்கமுள்ள இரட்சகர் என்று பிரகடனப்படுத்துவதன் மூலம் லூக்காவின் சுவிசேஷம் பதிலளிக்கிறது. ஏழை பணக்காரர்களுக்கும், மதத் தலைவர்களுக்கும், சமூக விரோதிகளுக்கும் தேவனின் இரட்சிப்பை இயேசு கொண்டுவந்தார். இயேசுவின் நற்செய்தி அனைவருக்குமானது. கவனிக்கப்படாதவர்களுக்கும் புறக்கணிக்கப்பட்டவர்களுக்குமானது. லூக்கா இதைப் பல வழிகளில் வலியுறுத்தினார். பல ஆண்கள் பெண்களை தாழ்வாகக் கருதிய காலத்தில் இயேசு சகோதரிகளான மரியாள் மற்றும் மார்த்தாளைக் கௌரவித்தார். லூக்கா உவமைகளையும் பெண்கள், நோயுற்றவர்கள் மற்றும் ஊனமுற்றோர், யூதர்கள் அல்லாதவர்கள் கூட பாராட்டப்படுவதற்கும் பின்பற்றப்படுவதற்கும் தகுதியானவர்கள் என்பதை விளக்கும் கதைகளையும் பதிவு செய்தார். தனது வாழ்க்கையில் சேமித்த பணத்தைக் கொடுத்த விதவையை இயேசு தேவாலயத்தில் பாராட்டினார். எல்லாராலும் வெறுக்கப்பட்ட வரி வசூலிப்பாளரான சகேயுவின் கதையை லூக்கா கூறினார், இயேசுவுக்கு சகேயு அளித்த பதில் லூக்காவின் அனைத்து வாசகர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக இருந்தது. சமூகம் நிராகரித்த அல்லது கவனிக்காமல் போனவர்களைப் பற்றிய இயேசுவின் கவலைகளை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

லூக்கா அடிக்கடி பதிவு செய்தார். உதாரணத்திற்கு, லூக்கா 7:12-16 விலுள்ள விவரங்களை கவனியுங்கள்:

> அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம்பண்ணும்படி கொண்டுவந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள்.... கர்த்தர் அவளைப் பார்த்து, அவள்மேல் மனதுருகி: "அழாதே" என்று சொன்னார். கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள். அப்பொழுது அவர்: "வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்!" என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார். எல்லாரும் பயமடைந்து: "மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார்" என்றும், "தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார்" என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள் (லூக்கா 7:12-16).

முதல் நூற்றாண்டு ரோம உலகில், தன் குமாரனை இழந்த ஒரு விதவைக்கு வசதி வாய்ப்புகள் குறைவாக இருந்திருக்கும், மேலும் வேலை தேடுவதற்கான வாய்ப்புகளும் குறைவாக இருந்திருக்கும். இயேசுவின் இரக்கத்தை வலியுறுத்துவதன் மூலம், இரட்சகராக கர்த்தரின் பணி ஏழைகளுக்கும் ஆதரவற்றவர்களுக்குமானதாக இருந்தது என்பதை லூக்கா சுட்டிக்காட்டினார். இந்த விவரத் தொகுப்பின் முடிவில் மக்கள் கூறியது போல், தேவையுள்ளவர்களுக்கும் முடியாதவர்களுக்கும் இயேசு செய்த ஊழியம், தேவன் தம்முடைய மக்களுக்கு உதவ வந்திருக்கிறார் என்பதற்கான சான்றாகும்.

எனவே, நாம் எப்படி இயேசுவை பின்பற்றுகிறோம் என்கிற இரண்டாவது கேள்விக்கு, லூக்காவின் சுவிசேஷம் எவ்வாறு பதிலளிக்கிறது? ஏழைகள் மீது லூக்காவிற்கு இருக்கிற அக்கறையின்படி, மற்றவர்கள் மீது இரக்கம் காட்டுவதே நாம் செய்ய வேண்டிய காரியமாகும். ஏழைகள் மீது அக்கறை கொண்டு, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய பாடுபட வேண்டும். நமது உடைமைகள், உணவு, பணம் மற்றும் அவற்றைத் தக்கவைப்பதற்கான நேரம் ஆகியவற்றைக் கொடுக்க நாம் தயாராக இருக்க வேண்டும். உண்மையில், தேவைப்படுவோரின் ஜெபங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் தேவன் அடிக்கடி சேவை செய்யும் கிறிஸ்தவர்களை அனுப்புகிறார். லூக்கா 12:33 இல் இயேசு கூறியது போல்:

> உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சைகொடுங்கள். பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத

> பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை (லூக்கா 12:33).

அவருடைய மக்களைக் கவனித்துக்கொள்வதன் மூலம், நாம் இயேசுவை உண்மையாகப் பின்பற்றும் போது, அவர் நமக்கு நித்திய சுதந்தரத்தை அளிக்கிறார்.

நாம் இயேசுவைப் பின்பற்றுவதற்கான மற்றொரு வழி, தேவன் நம் தேவைகளை பூர்த்தி செய்வார் என்பதில் நம்பிக்கையுடன் இளைப்பாறுவதாகும்.

உதாரணமாக, லூக்கா 12:22-31 இல் உள்ள இயேசுவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> என்னத்தை உண்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.... தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (லூக்கா 12:22-31).

தேவனுடைய ராஜ்யத்தின் அங்கத்தினர்களாக, நம்முடைய மகத்தான ராஜாவாகிய இயேசு கிறிஸ்து நம்மைக் கவனித்து, நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்வார் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம்.

இரட்சகரை நம்புவதற்கான இந்த முக்கியத்துவம் லூக்காவின் சுவிசேஷத்தில் உள்ள சமாதானம் மற்றும் சந்தோஷம் ஆகிய மற்ற இரண்டு கருப்பொருள்களுடன் நெருக்கமாக தொடர்புடையது. உதாரணமாக, லூக்காவின் சுவிசேஷத்தின் தொடக்கத்தில், லூக்கா 2:10-14 இல், தேவதூதரின் இந்த அறிவிப்பைப் வாசிக்கிறோம்:

> இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் ... உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள் (லூக்கா 2:10-14).

இருபத்தி இரண்டு அதிகாரங்களுக்குப் பிறகு, லூக்கா தனது சுவிசேஷத்தை அவர் தொடங்கிய அதே வழியில் முடித்தார். அவரது கதையின் முடிவில், சீஷர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசுவைப் பின்தொடர்ந்து, 2 ஆம் அதிகாரத்தில் தேவதூதர்கள் தீர்க்கதரிசனம் கூறிய சந்தோஷத்தை அனுபவித்தனர்.

> அந்த உரையாடலில் மூன்று முறை, யோவான் 20 இல், "உங்களுக்கு சமாதானம் உண்டாகட்டும்" என்று இயேசு கூறுகிறார். மேலும் அவர் ஹலோ சொல்வதாக நான் நினைக்கவில்லை. இதுதான் யதார்த்தத்தின் அடித்தளம் என்று அவர் கூறுகிறார் என்று நினைக்கிறேன். நீங்கள் இப்போது வேதனையில் இருந்தபோதிலும், நீங்கள் விரும்பும் ஒருவரை நீங்கள் இழந்துவிட்டீர்கள், நான் திரும்பி வருவேன் என்று உங்களுக்குத் தெரியாது, நீங்கள் விரைவில் ரோமர்களின் சர்வாதிகாரத்தின் கீழ் இருக்கப் போகிறீர்கள், நீங்கள் அடக்குமுறையின் கீழ் வாழ்ந்தீர்கள், இது மிகவும் மோசமாகப் போகிறது, நான் இங்கே இருக்கிறேன் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும், நான் இங்கு இருக்கும்போது, நான் ஒரு அடிப்படை சமாதானத்தைக் கொண்டு வருகிறேன். நான் உங்கள் சந்தோஷம். அதனால் உங்கள் வெளிப்புற வாழ்க்கையில் என்ன நடந்தாலும், உங்கள் வாழ்க்கையில் என்ன நடந்தாலும், என்னை அறிந்தால், உண்மையான சமாதானத்திற்கான அடித்தளம் இருக்கிறது. வேதத்தின் வார்த்தை "ஷாலோம்" ஆகும். இந்த முழுமையான நீதியான ஆட்சி மற்றும் தேவனுடைய ஆட்சி என்ன நடந்தாலும் சமாதானமாக இருக்கும். மேலும், நான் சந்தோஷத்தைக் கொண்டுவருகிறேன். நான் உங்களைத் துன்புறுத்துவதற்காக மட்டும் இங்கு வரவில்லை. நான் உங்களுக்கு உண்மையான சந்தோஷத்தை, அதாவது உணர்ச்சியை விட மேலான சந்தோஷத்தைக் கொண்டுவர வந்துள்ளேன். உலகம் முழுவதையும் நான் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறேன் என்பதையும், என் மூலம் முதலில் வராத எதையும் நான் உங்கள் மீது வர விடமாட்டேன் என்பதையும் உள்ளடக்கிய ஒரு நேர்மறையான புரிதலே சந்தோஷம் என்று இயேசு கூறுகிறார். பவுல் ஆவியின் கனியைப் பற்றி பேசும்போது அதைச் சொல்லும் விதம் எனக்குப் பிடிக்கும். கிறிஸ்தவர்களின் வாழ்க்கையை நிரப்ப பரிசுத்த ஆவியானவர் வரும்போது, நீங்கள் அனைவரும் விரும்புவீர்கள்; அடுத்த வார்த்தை, நீங்கள் சந்தோஷமாக இருப்பீர்கள். மேலும் அவை பிரிக்க முடியாதவை என்று நான் நினைக்கிறேன். நிச்சயமாக, அவர் வேறு ஆறு

> விஷயங்களைச் சேர்க்கிறார், ஆனால் முக்கிய விஷயம் என்னவென்றால், தேவனுடைய அன்பு சிந்தப்படும்போது அல்லது என் இருதயத்தில் கொண்டு வரப்பட்டால், நான் உண்மையில் என் சொந்த புரிதலால் வாழமாட்டேன், அது அநேகமாக இழிந்ததாகவும், அவநம்பிக்கையுடையதாகவும், எதிர்மறையானதாகவும் இருக்கும். ஆனால் இயேசு இருக்கும் போது, ஒரே பதில், நான் சமாதானமாக இருக்கிறேன் என்பது மட்டுமே ஒரே பதிலாக இருக்கும். அவர் தனது உயிர்த்தெழுதல் வல்லமையை என் வாழ்க்கையில் கொண்டு வந்தார், எனக்கு சந்தோஷம் இருக்கிறது, எனக்கு நம்பிக்கை இருக்கிறது, ஏனென்றால் இயேசுவில் தோல்வி இல்லை. ”விஷயங்கள் பிரிந்து செல்வது” இல்லை. அவர் எல்லாவற்றையும் ஒன்றாகவும் முழுமையாகவும் பூரணமாகவும் கொண்டு வருகிறார்.
>
> – Dr. பில் உரி

24:52-53 இல் லூக்காவின் இறுதி வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> பின்னர் அவர்கள் அவரை வணங்கி, மிகுந்த மகிழ்ச்சியுடன் எருசலேமுக்குத் திரும்பினர். நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள் (லூக்கா 24:52-53).

லூக்காவின் சுவிசேஷத்தில், இயேசுவைப் பின்தொடர்வது என்பது நமது இரட்சிப்பு மற்றும் தேவனின் அனைத்து ஆசீர்வாதங்களிலும் மகிழ்ச்சியாக இருப்பது, அவரில் நிம்மதியாக இளைப்பாறுவது, நம்முடைய எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்ய அவர் மீது நம்பிக்கை வைப்பது மற்றும் இதே ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்குக் கொண்டு வர அவரால் பயன்படுத்தப்பட தயாராக இருப்பதும் ஆகும்.

“இயேசு யார்?” மற்றும் ”நாம் அவரை எவ்வாறு பின்பற்றுகிறோம்?” என்கிற கேள்விகளுக்கு மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியோர் எவ்வாறு பதிலளிப்பார்கள் என்பதைப் பார்த்தோம். இந்தக் கேள்விகளுக்கு யோவான் எவ்வாறு தனித்துவமாக பதிலளித்தார் என்பதைக் கருத்தில் கொள்ள நாம் தயாராக இருக்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## யோவான் சுவிசேஷத்தில் இயேசு யார்?

யோவான் தனது சுவிசேஷத்தில் இயேசுவை நித்திய இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றும் தேவனுடைய குமாரனாக சித்தரித்தார். இயேசுவை தேவனுடைய குமாரனாக அடையாளப்படுத்திய யோவான், தம் பிதாவுடன் இருந்த இயேசுவின் தனித்துவமான உறவைப் பற்றி பேசினார். இயேசு தம்முடைய பிதாவின் இறுதி வெளிப்பாடாக இருக்கிறார். அவர் மீது விசுவாசம் வைக்கும் அனைவருக்கும் நித்திய ஜீவனைக் கிடைக்கச் செய்யக்கூடியவராக இருக்கிறார். உதாரணமாக, மற்ற மூன்று சுவிசேஷ எழுத்தாளர்கள் இயேசுவின் பிறப்பு அல்லது அவருடைய பூமிக்குரிய ஊழியத்தைக் குறித்த தங்கள் சுவிசேஷ தகவல்களுடன் ஆரம்பித்தார்கள். ஆனால் யோவான் தனது சுவிசேஷத்தை தேவனுடைய குமாரன் பிதாவுடன் சிருஷ்டிப்பில் ஈடுபட்ட காரியத்தோடும் அவருடைய ஒரே குமாரனில் பிதா வெளிப்படுத்தப்பட்டார் என்கிற காரியத்தோடும் ஆரம்பித்தார்.

இந்த மகிமையான செய்தியை யோவான் தெரிவித்த மற்றொரு வழி, இயேசு கூறிய “நான்” என்ற கூற்றுகள் ஆகும். இந்தக் கூற்றுகளில், இயேசு தேவனுடைய உடன்படிக்கையின் பெயரை “யாஹ்வே” என்று குறிப்பிட்டார், சில சமயங்களில் “யெகோவா” என்று மொழிபெயர்த்தார். யாத்திராகமம் 3:14 இல், ”யாஹ்வே” என்ற பெயருக்கு அடிப்படையில் ”நான் இருக்கிறேன்” என்ற அர்த்தத்தை தேவன் தந்தார். இயேசு இந்த பெயரை யோவான் 6:35 இல் குறிப்பிட்டார், அங்கு அவர், ”ஜீவ அப்பம் நானே” என்று கூறினார். 8:12 மற்றும் 9:5 இல் ”நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்” என்ற சொற்றொடரிலும் அதைக் காண்கிறோம். மேலும் 10:7, 9 இல் “நானே வாசல்” என்று வாசிக்கிறோம். 11:25 இல், ”நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்” என்று இருக்கிறது. 14:6 இல், ”நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்” என்று இருக்கிறது. 15:1 இல், ”நானே மெய்யான திராட்சைச் செடி” என்று காண்கிறோம். மேலும் 8:58 இல், “நான் இருக்கிறேன்” என்று இயேசு உச்சக்கட்ட அறிவிப்பை வெளியிட்டார். இந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும், இயேசு தன்னை தேவனுடைய பரிசுத்த பழைய ஏற்பாட்டு நாமத்தைத் தாங்கியவர் என்று அறிவித்தார், மேலும் தேவனை தன்னில் வெளிப்படுத்தினார்.

தேவனின் நித்திய இரட்சிப்பின் மையத்தில் இயேசுவின் இடம் இருப்பது குறிப்பாக யோவான் 17 இல் இயேசுவின் பிரதான ஆசாரிய ஜெபத்தில் தெளிவாகத் தெரிகிறது.

யோவான் 17:24 இல் இயேசு ஜெபித்ததைக் கவனியுங்கள்.

> பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான்

> எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன் (யோவான் 17:24).

இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களின் இரட்சிப்பைப் சிருஷ்டிப்பிற்கு முன் குமாரன் மீது பிதா கொண்டிருந்த அன்போடு ஒப்பிட்டு விவரித்தார். நம்முடைய இரட்சிப்பு என்பது இயேசுவின் மீது பிதாவுக்கு இருந்த அன்பின் வெளிப்பாடாகும் என்பதே அவருடைய கருத்து.

ஆகவே, இயேசுவை நித்திய இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றிய தேவனின் குமாரனாக யோவான் சித்தரித்திருந்தால், யோவானின் சுவிசேஷம் நமது இரண்டாவது கேள்வியான, இயேசுவை நாம் எவ்வாறு பின்பற்றுகிறோம் என்கிறதற்கு எவ்வாறு பதிலளிக்கிறது?

யோவானின் சுவிசேஷத்தில், நாம் இயேசுவைப் பின்பற்றுவதற்கான முதன்மை வழி, தேவனால் நேசிக்கப்படுவதும், அதே அன்பை ஒருவருக்கொருவர் காட்டுவதும் ஆகும். பல வழிகளில் நாம் பின்பற்றுவதற்கு இயேசு இந்த மாதிரியை நிறுவினார். உதாரணமாக, யோவான் 17:23-26 இல் இயேசு குமாரனின் மீது இருந்த பிதாவின் அன்பைப் பற்றிப் பேசினார். குமாரன் மீது இருந்த பிதாவின் இந்த நித்திய அன்புதான் இயேசு நிறைவேற்றிய நித்திய இரட்சிப்பின் திட்டத்திற்குப் பின்னால் இருந்தது. எனவே, யோவானின் சுவிசேஷத்தில் சீஷத்துவம் அன்பினால் வகைப்படுத்தப்படுகிறது என்பது அர்த்தமுள்ளதாக இருக்கிறது. யோவான் 13:34-35 இல் இயேசு தம் சீஷர்களிடம் இவ்வாறு கூறினார்:

> நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார் (யோவான் 13:34-35).

யோவானின் கூற்றுப்படி, நாம் ஒருவரையொருவர் அவருடைய அன்பின் மூலம் நேசிப்பதன் மூலம் இயேசுவைப் பின்பற்றுகிறோம்.

இந்த வழியில், சீஷத்துவம் அன்பில் தொடங்கப்படுகிறதாகவும் நடத்தப்படுகிறதாகவும் இருக்கிறது. தேவன் நம்மீது வைத்திருக்கும் அன்பு நமது சீஷத்துவத்தை ஆரம்பிக்கிறது. மேலும் நம் மூலம் பிறரிடம் காட்டும் தேவ அன்பு நமது சீஷத்துவத்தின் வெளிப்பாடாகும். யோவான் தனது சுவிசேஷம் முழுவதிலும் தன்னை "இயேசுவை நேசித்த சீஷன்" என்று குறிப்பிடாமல் "இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்" என்று ஏன் குறிப்பிட்டார் என்பதைப் புரிந்துகொள்ள இது

நமக்கு உதவுகிறது. மற்றவர்களிடம் அன்பு செலுத்தும் திறமை எதுவாக இருந்தாலும் அது இயேசுவின் அன்பின் ஆழத்திலிருந்து வந்தது என்பதை அவர் அறிந்திருந்தார். இயேசுவைப் பின்பற்றுபவர்கள் முதலில் நேசிக்கப்பட்டவர்கள், பின்னர் அவர்கள் ஒருவரையொருவர் நேசிக்க அழைக்கப்படுகிறார்கள்.

> நான்கு சுவிசேஷங்களில் உள்ள வேறுபாடுகள் பொருந்தாதவைகளாக இருக்கின்றன என்றும், அவை முரண்பாடான கதைகளைச் சொல்கின்றன என்றும் ஒருவர் ஆச்சரியப்படலாம், ஆனால் அது அப்படி இல்லை என்று நான் நினைக்கிறேன். நான்கு சுவிசேஷங்களில் உள்ளவை இயேசுவின் கதையில் இருக்கிற நான்கு இணக்கமான முன்னோக்குகள் என்று நான் நினைக்கிறேன். பாவிகளை பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் இரட்சிப்பதற்கு உலகிற்கு வந்த தேவனின் அவதாரமான இந்த மனிதனின் வரலாற்றை அவை நமக்குச் சொல்கின்றன என்ற எண்ணத்தில் நான்கு சுவிசேஷங்களும் ஒன்றிணைகின்றன. மேலும் ஒவ்வொரு சுவிசேஷமும் இயேசுவை வெவ்வேறு கண்ணோட்டங்களில் பார்க்கிறது மற்றும் அவருடைய வாழ்க்கையின் வெவ்வேறு விவரங்களை வலியுறுத்துகிறது, ஆனால் அந்த செய்திகளும் முன்னோக்குகளும் முரண்பாடானவை அல்ல, ஆனால் அவை இணக்கமானவை.
>
> – Dr. ஸ்டீவன் கோவன்

# முடிவுரை

இந்த பாடத்தில், சுவிசேஷங்களை ஆய்வு செய்வதற்கு நாம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளோம். சுவிசேஷங்கள் நம்பகமான வரலாற்றுக் கதைகள் என்பதைக் குறிப்பிட்டு அவைகளின் இலக்கியத் தன்மையைப் பார்த்திருக்கிறோம். அவை புதிய ஏற்பாட்டு வேதாகமத்தின் உண்மையான பகுதியாக இருப்பதைக் கண்டு, சபையில் அவைகளின் நிலையையும் நாம் பரிசீலித்தோம். ஒவ்வொன்றும் இயேசுவையும் சீஷர்களையும் தனித்தனியாக சித்தரித்தாலும், அவைகள் அனைத்தும் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய ஒரே கதையைச் சொல்வதைக் கண்டறிந்து, ஒவ்வொன்றையும் ஒப்பிட்டுப் பார்த்தோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சுவிசேஷங்களைப் புரிந்துகொள்வது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் முக்கியமானதாகும். இம்மையைக் குறித்தும் மறுமையைக் குறித்தும் நமக்கிருக்கிற நம்பிக்கையை நாம் நேருக்கு நேர் காணாத இயேசுவின் கரங்களில் வைக்கிறோம். அவரைப் பற்றி நமக்குத் தெரிந்த அனைத்தும், அவருடைய வார்த்தையின் மூலம் தான் நமக்குத் தெரிகிறது. குறிப்பாக சுவிசேஷங்கள் மூலம் நமக்குத் தெரிகிறது. இந்த அறிமுகப் பாடத்தில் நாம் கற்றுக்கொண்ட விஷயங்களும் ஒவ்வொரு சுவிசேஷகரின் செய்தியும் நம் விசுவாசத்தையும் வாழ்க்கையையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்வதற்காக, நான்கு சுவிசேஷங்களில் ஒவ்வொன்றையும் இன்னும் ஆழமாக ஆராய்வதற்கு நம்மைத் தயார்படுத்தியிருப்பதாக நம்புகிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.